KALANILAYAM தனிப்பிரதி விலை அணா மூன்று.

m 211, N28 KN
N32.5.36.
199150

KALANILAYAM

தனிப்பிரதி விலை அணா மூன்று.

# கலாநிலயம்

A Literary Weekly

வியாழன்தோறும் வெளிவரும்.

வருஷ சந்தா
உள் நாடு ரூ. 7 8 0
புற நாடு ரூ. 9 8 0

காரியாலயம்:—
வேளாளர் தெரு,
புரசைபாக்கம், சென்னை.

Vol 5.] 1932 வரு செப்டம்பர் மீ 15உ [No. 36

பொருளடக்கம்.

1. தலையங்கம் (Leader) 701
2. தமிழ்ப்பாடம்
நளவெண்பா - கலிதொடர்காண்டம் 703
3. நம்மாழ்வார் வைபவம் (3-ம் பத்து, 7-ம் தசகம்) K. இராஜகோபாலாச்சாரியார் B.A., B.L., 705
4. ஷெல்லி—கடல். P. C. ஜயவேலு 707
5. முருகன் போற்றி மாலை
நவாலி க. சோமசுந்தரம் பிள்ளை 708
6. ஜூலியஸ் ஸீஸர் (அங்கம் 4. களம் 3.)
ஷேக்ஸ்பியர் நாடகம் 710
7. அப்பர் (64 கலைகள்—தர்க்கம்)
E. N. தணிகாசல முதலியார் B.A. B.L. 711
8. பொதிகைநிகண்டு (இடப்பெயர்த் தொகுதி)
S. வையாபுரிப் பிள்ளை B.A. B.L. 713
9. கம்பராமாயணம் (கரன்வதைப் படலம்)
T. N. சேஷாசலம். B.A. B.L. 715
10. சொல்லூடாட்டம் - 8 717
11. வர்த்தமானம் 719

## கலாநிலயம்

### விருப்பமும் கருவியும் 11.

காதலோடு கலந்த களவுமணத்தைக் கைக்கொள்ளக் கூறுவதன் முன், இதனாலும் இது போன்று தற்காலம் வற்புறுத்தப் பெறுகின்ற மற்றைய முறைகளாலும் மனிதர் எய்தவேண்டும் என்று விரும்புகின்ற தன்மை இன்னதெனத் தெரிவிக்காமலே தீர்த்துவிடுகின்ற இவ்வெளிமையை எடுத்துரைத்தல் மிகையென்று எவரும் எண்ணவொண்ணாவகை, பொருளலவெல்லாம் பொருளுடை மொழிகளேபோல் இக்காலம் வழிவழி வழங்கிவரும் விபரிதங்களிற் சிலவற்றை இதுகாறும் விளக்கலுற்றோம். சிறியன மற்றும் பல கற்றிருப்பது போன்றே, நுனிப்புல் நுகர்கின்ற இக்கொய்ம்மையையும் நம் இந்தியர், மேனாட்டோரில், மெய்த்திற முணர்ந்த எமர்ஸன் கார்லைல் மேடர்லிங்க் அனைய நிரந்தர வித்தகர்களைப் புறக்கணித்து, வாய்தந்தன வழங்கியொழியும் சிறப்பிலா உரையாளரிடத்தே கற்றிருக்கின்றனர். உதாரணமொன்று காட்டுவோம். இந்தியர் இன்று சீர்திருத்த மேடைகளிலும் பத்திரிகையிதழ்களிலும் வழிவழி யியம்பும் பயனில்மொழிகளுக்கு முதனூல் போன்ற மேனாட்டுக்கட்டுரைகளில், "திரிவேணி" என்னும் பத்திரிகையில், ப்ளேயர் மாக்லினோஹான் என்பவர் "அரசியல் உரிமைக்கு இந்தியா ஆயத்தமாகி வருகின்றதோ" என்னுந் தலைப்பின் கீழ், இம்மாதம், எழுதியிருப்பதுவும் ஒன்றாம்.

இந்தியர் உபயோகமுடைய ஒன்றற்கும் ஆயத்தமாக மாட்டாமைக்கு அடிப்படையான காரணம் யாதெனக் காட்டுங்கருத்தினராய்ப் பின்வருமாறு அவர் கூறுகின்றார்:—

"Leading Indians must do something and do it speedily to rouse India from the age-long lethargy and help her to take a necessary interest in this world and its material affairs (and especially the world of India itself) from the highest practical standpoint. It may be well enough for a people to set their hearts and minds constantly on gods of unseen worlds, but if in doing so they neglect the essentials of the world in which they live, what has been gained ?"

[பன்னெடுங் காலமாய்க் கிடந்த உறக்கத்தினின்று எழுந்து இந்தியர் பயன்படக்கூடியவகையில் இவ்வுலக விடயங்களில் ஊக்கங் கொள்ளவேண்டும். கண்காணா உலகத்துக் கடவுளர்பால் முப்பொழுதும் தம் கருத்தைச் செலுத்தியிருத்தல் தீதன்றெனினும், அவ்வாறு செய்வதனால் சனங்கள் தாம் வசிக்கின்ற இவ்வுலக அவசியங்களைப் புறக்கணிப்பாராயின், என்ன இலாபம் எய்தப்பெற்றிருக்கின்றனர்—என்பது இதன் பொருள்]

சித்தத்தைச் சிவன்பால் வைத்துப் பித்தாய்ப் பிதற்றுகின்ற பிழைதான் இந்தியர்க்கு மெய்ம்மையாயின் பிறிதொரு குறையில்லையே. "இதனால் இலாபம் பெறாமற் கெட்டீர்" என்னுங்கால் கூறுகின்ற காரணமும் பொய், உலகாதிகளிலேயே ஊக்கங்கொண்டவர்போல் உழல்கின்ற மேனாட்டோரும் மற்றையோரும் ஏதோ இலாபங்கள் பெற்றிருப்பவர்போல் பேசுவதும் பொய். பொதுப்படச் சனங்களை நோக்கிப் பகருங்கால் பொருளுரைபோல் வேடம் புனைந்த இச்சொற்களால் மயக்குறாமல் தேர்வதற்கு மிகவும் எளியதோர் சோதனையுளது. கேடடைந் திருக்கின்ற மக்களில் எவரேனும் ஒருவர், "நான் கடவுளின்பால் கருத்தை வைத்திருந்ததாற்றான் கெட்டேன்" என்று

பொய்யாகவேனும் புகலத்துணிபவர் உளராயின்—நன்று, அவர் விலாசம் எமக்கு வேண்டும். உண்மையில் எது இன்மையாற் கெட்டோமோ, அது இருத்தலே கேட்டிற்குக் காரணம் ஆயிற்றென்னும் படிற்றுரையை மதித்தறிய மாட்டாதார் நிலைமைக்கு என்னென்று இரங்குவோம். இதுவுமன்றி, கடவுள்நினைவினும் தத்துவ உணர்விலும் கிடந்துறங்குகின்றவர் என்னும் அபவாதம் ஒருபோதும் சார்ந்திராத சாதியார் எய்தியிருக்கின்ற இலாபம் இன்னதென்று உரைக்க வல்லாரை இதுகாறுங் கண்டிலேம். This mad unrest which men miscall delight, என்பன போன்ற பெரிய வாசகங்களேயே ஷெல்லி அனைய வித்தகர்கள் வாய்நின்று கேட்கின்றோம்.

மற்றோரிடத்தில் இவர் கட்டுரை இவ்வண்ணம் செல்கின்றது:—

In India there are staggering number of barriers separating its people, and so long as this continues you can never hope to have a united people, or a steady and powerful national consciousness. Aside from multitudes of barriers in the form of innumerable religious practices, of many vernaculars and hundreds of separate states, you have those numberless, out-of-date castes and divided sub-castes, all which tend to keep India in a state of hopeless, inner disunity. It is one of the amazing facts of the Indian peoples that nowhere in the world is there a people whose highest religion emphasizes *the principle* of the unity of life in all its forms more emphatically or more beautifully, and yet there is no people less united in religion, language or political and social status. Let the mystery *of this speak for itself.*

[பலதிறப்பட்ட மதச் சடங்குகளும் சாதிப் பிரிவுகளும், மொழி வேற்றுமைகளும் இந்திய சனங்களின் ஒற்றுமைக்குக் கடக்கரிய இடையூறுகளா யிருக்கின்றன. உருவம் யாவதாயினும் உயிரென்பதெல்லாம் ஒன்றே என்னும் தத்துவத்தை இந்தியரைவிட அழகுற வற்புறுத்தும் தேசத்தவர் இவ்வுலகில் வேறெவரும் இல்லாதிருக்க, இவ்விந்தியரே யாவரிலும், மதத்தாலும் மொழியாலும் அரசியலிலும் பிறப்பிலும் ஒவ்வாது வேறுபட்டிருக்கின்ற விந்தையை அதுவே விளக்கிக்கொள்ளட்டும்—என்பது கருத்து]

விளங்காததெல்லாம் விந்தையல்ல—மதிவன்மையில்லாதார்தம் மயக்கமாகவும் இருக்கலாம். தலைகீழ்ப் பாடத்தால் தழைக்கின்ற மலைவு இது. அத்துவித சமரச சிந்தனையை இழந்தமையால் புகுந்தவோர் இகலன்றோ இவ்வேற்றுமைகளைத் தனக்கு இரையாக விளைவித்துக்கொள்கின்றது? இல்லையேல் பேராலும் உருவத்தாலும் வேறாயிருக்கின்ற வோர் நிலையே அன்பழிந்து இகல்வதற்குக் காரணமாகாது. ஒரு சாதியார் ஒரு சாதியார், மறு சாதியார் மறு சாதியார், அவ்வளவே; அதன்மேல் இவ் வேற்றுமைபற்றிக் கருத்தைச் செலுத்துவதற்கு வேறொன்று மில்லை. தத்துவ உணர்வை இழந்ததால் இழிந்ததோர் ஒழுக்கத்தைக் கண்டு, அவ் வுணர்விருக்க இவ்விழிவு எவ்வாறு வந்ததென வாய்பிளக்கவியப்பாரையன்றோ நாம் வியக்கவேண்டும். அத் தத்துவ உணர்வு இல்லாமலொழிவதற்குரியவைகளை யெல்லாம் ஒருபுறம் செய்துகொண்டே இவ் வேற்றுமையை நீக்குதற்கு வருந்துவாரைக் கண்டன்றோ வருந்தவேண்டும். இன்னோர் சொற்களுக் கிரையாகி ஆரவாரஞ்செய்து பொய்யின்வாய்க் களிக்கின்ற மக்கள் அளியராவார்.

எப்பெயர் வைத்தேனும் வேற்றுமைபாராட்டி விவகரிப்பதெல்லாம் ஒற்றுமை உணர்ச்சி யில்லாமைக் குறிகளேயன்றி, ஒற்றுமையைச் சிதைக்கின்ற காரணங்களல்ல வென்பதைத் தெரிந்துகொள்ளற் குரிய மதியின் பயிற்சியுந் தர்க்கமுயற்சியும் செய்யவேண்டுமென்னும் எண்ணம் பொதுஜன நன்மையிற் பரிவுடைய மாந்தருக்கு உதித்தாலன்றி ஊதியமில்லை. சாதியால் சமயத்தால் சடங்கினுல் மொழியினுல் பிளவுபட்டிருத்தலால் இந்தியர் ஒற்றுமையுணர்ச்சி அற்றவாகின்றார் என்பதெல்லாம் வம்பே. மாண்பில்லா மனத்தனா யிருத்தலால் மானுட உறவிற்கு முற்றிலும் மாறாகி ஒழுகுகின்றான் மனிதன் என்பதொன்றே ஏற்புடைத்து. இந்தியரின் ஒற்றுமையைச் சிதைப்பனவென்று இங்கு இழித்துரைக்கப்படும் வேற்றுமைகள் ஒன்றும் நம் ப்ளேயர் மாக்லிஹான் வாழும் மேனாடுகளில் இல்லையே. அங்குள்ளோர் செய்தி என்ன வாயிற்று? அந்தத் தேயங்களில் உள்ளவர்கள் ஒன்றுபட்ட மனத்தினராய் கலந்துவந்து வாழ்கின்றாரென்று எண்ணுவதற்கு ஏதேனும் இடமுளதோ. அம் மேனாடுகளில் மனிதவாழ்க்கை ஒற்றுமையின்றி எத்துணை சிதைந்திருக்கின்றதென்னும் இரகசியத்தை அக்கட்டுரையாளரே, தன்னுடைய முரணைத் தானே தெரிந்துகொள்ளுந் திறமின்றி, ஓராமல் உரைத்துவிடுவதைக் கீழ்வரும் வாக்கியத்திற் காணலாம்:—

"You should study the causes of national and race failure elsewhere, aud write it into India's plan that these things shall not pass into your public life. For example, the loss of the true home and its upbuilding influence in the West, resulting in youthful crimes over a widespread area. Save your home and your woman for the home."

[மேனாடுகளில் மெய்யான இல்வாழ்க்கை என்பது சிதைந்தொழிந்துவிட்டது. அதனுல், மானுட வாழ்க்கையின் மேன்மைகளைத் தாங்கும் ஆதாரமற்றுப் போய் இளைஞர்களுக் கிடையே குற்றங்களும் தீய ஒழுக்கங்களும் எங்கெங்கும் பரவுகின்றன. இந்தியர்களே, இந்தத் தீமை உங்களையும் சாராமல் காத்துக்கொள்ளுங்கள். உங்கள் மனைகளையும், அம் மனைவாழ்க்கையின் மாண்பின் பொருட்டு உங்கள் மகளிரையும் கெடுக்காமல் காத்திடுங்கள்.—என்பது இதன் பொருள்]

ஒரு வீட்டில் ஓரினத்தார் உறவினர்கள் ஒத்துவாழும் வகையிழந்த வாயினர், வேறு சில பிரிவுகளால் இந்தியர் ஒற்றுமையற்றனர் என்றுரைக்க எவ்வாறு துணிந்தனரோ! இன்னவர்தம் வாய்பார்த்திருக்கும் நம் மிந்தியச் சீர்திருத்தத் தலைவர்களைக் கண்டு இரங்காமல் கடிகின்றவர் வன்னெஞ்சரே.

பெயரும் சடங்கும் வெளிவேடமும் வேறு வேறு ஆயினும் அறிவுடையோர்மாட்டு அது எவ்வித வேற்றுமை யுணர்விற்கும் விளைநிலமாக வேண்டா. அறிவிலான் தன்னுடனேயே தான் ஒற்றுமையின்றி வேறுபடுகின்றான். எனின் வேறுவேறென்று வகுக்கப்பட்டதெல்லாம் மானுட இணக்கத்திற்கு இடையூறாகவேண்டுமென எண்ணுவது எள்ளளவேனும் மதியுடைமையென்பதற்குச் சான்றுபகராது. நாடக மேடையில், ஒருவன் அரசனாகவும் ஒருவன் மந்திரியாகவும் ஒருவன் வேலையாளாகவும் ஒருவன்படை வீரனாகவும் வருகின்றான். இவையெல்லாம் வெளி வேறுபாடுகள். உள்ளுற்ற உண்மை இவரனைவரும் மனிதர்களென்பதே. உள்ளத்தின் தெளிவுடையோர்க்கு உலகத்து வேறுபாடுகளும் இவ்வாறே தோன்றுமன்றி மாறுபடு நிலைகளாய் அவர் ஒன்றையுங் கருதமாட்டார். உள்ளத்தால் புரிவதன்றிப் புறத்திருந்து பிரிவதொன்றுமில்லையே. ஆம் இவ்வளவும் உண்மையே. ஆயினும் வித்தகர்க்கன்றோ இதுபொருந்தும், மற்று எமக்கென்னாயிற்று, என்று எண்ணமிட்டுக் கண்மூடுவார் சிலர். உயரிய உண்மையுடைய நோக்கங்களை இவ்வாறு கழித்து விடுவோரைக் கருதி ஷோபன்ஹார் (Arthur schopenhauer) உரைத்தவோர் வாசகத்தை மறக்க வேண்டா:—

"**Yes**, you say, **But these are for philosophers,** And you are fools, eh? precisely"

197150



# தமிழ்ப் பாடம் 36.

## நள வெண்பா—கலிதொடர் காண்டம்

[689-வது பக்கத் தொடர்ச்சி]

இருவ ருயிரு மிருகையால் வாங்கி
ஒருவன்கொண் டேகுவா னொத்து—வருமறையோன்
கோமைந்த னோடிளைய கோதையைக் கொண்டேகி
வீம னகர்க்கே விரைந்து. [ஏகினன் 75.

பதவுரை.

வரும் - அவர்களோடு வந்த ஒரு
மறையோன் - அந்தணன்,
இருவர் - (நளன் தமயந்தி ஆகிய) இருவர்களுடைய
உயிரும் - உயிரையும்
இரு - இரண்டு
கையால் - கைகளினுல்
வாங்கி - பெற்று
கொண்டு - கொண்டு
ஏகுவான் - போகின்றவன்
ஒருவன் - ஒருவனை
ஒத்து - போல,
கோ - அரசனுடைய
மைந்தனோடு - பிள்ளையோடு
இளைய - அவனுக்குத் தங்கையாகிய
கோதையை - பெண்ணையும்
கொண்டு - அழைத்துக்கொண்டு
விரைந்து - வேகமாக
வீமன் - வீமராஜனது
நகர்க்கு - நகரத்திற்கு
ஏகினன் - போனான்.

கருத்து:—மக்களை அழைத்துக்கொண்டு அந்தணன் அகன்றபோது, நளனும்தமயந்தியும், போவது தங்கள் உயிரே எனத் தளர்ந்து வருந்தினர், என்பது இந்தச் செய்யுளின் கருத்து.

இலக்கணம்.

முதல்வேற்றுமையில் நிற்கின்ற பெயர்ச்சொல் ஒரு காரியத்தைச் செய்கின்ற வினைமுதலைக் காட்டும் என்றோம். செய்யப்படுகின்றது இதுவென்று தெரிவிக்க வேண்டுமாயின் அது இரண்டாம் வேற்றுமையாக மாறும். இனி அக்காரியம் எதனுல் அல்லது எதனோடு செய்யப்பட்டது என்றுகாட்டும் வேற்றுமை மூன்றாம் வேற்றுமை.

ஒவ்வொரு வேற்றுமைக்கும் எது எது உருபென்றும் அந்த உருபு வந்து என்னவென்ன பொருளைத் தருவிக்கும் என்பதையும் கற்கவேண்டும்.

இரண்டாம் வேற்றுமைக்கு அனேக பொருள்கள் இருக்கின்றன. அவைகளில் ஆறு பொருள்கள் முக்கியமானவை. அவை, ஆக்கல் அழித்தல் அடைதல் நீத்தல் ஒத்தல் உடைமை, என்பன. சாதாரணமாக இரண்டாம்வேற்றுமை செயப்படுபொருளைக் காட்டுகின்றபடியால் யாதாவதொன்று என்ன செய்யப்பட்டது என்றுகாட்டுவதுதானே அதன் கருமமாயிருக்க வேண்டும். செய்யக்கூடிய காரியங்கள் சாதாரணமாக எவை எவை? ஒன்றை உண்டாக்கலாம், அல்லது இல்லாமல் செய்யலாம், அல்லது பெறலாம், அல்லது விட்டு விடலாம், அல்லது ஒத்து இருக்கலாம், அல்லது உடைத்தாயிருக்கலாம். வேற்றுமை உருபு ஆகிய ஐ வந்தாலும் வராமற் போனாலும், முன் சொன்ன ஆறுவித பொருள்களில் ஒன்றினைக்கொண்டிருக்குமாயின் அச்சொல் இரண்டாம் வேற்றுமை அடைந்திருக்கின்றதென்று சொல்லவேண்டும்.

உதாரணம்:—

விரி:—

| | | |
|---|---|---|
| (1) | தச்சன் பெட்டியைச் செய்தான்<br>அவன் வீட்டைக் கட்டினான்<br>இவன் பயிரை நட்டான் | ஆக்கல் பொருள் |
| (2) | தச்சன் பெட்டியை உடைத்தான்<br>இவன் வீட்டை இடித்தான்<br>இவன் பயிரை அழித்தான் | அழித்தல் |
| (3) | இவன் வீட்டைச் சேர்ந்தான்<br>அவள் பிள்ளையைப் பெற்றாள்<br>அவன் பிணியை உற்றான் | அடைதல் |
| (4) | அவன் செல்வத்தை இழந்தான்<br>இவன் வீட்டைவிட்டுப் போனான்<br>அவன் மனைவியைப் பிரிந்தான். | நீத்தல் |
| (5) | அவள் முகம் சந்திரனை ஒக்கும்<br>கிளியைப் போல் பேசினாள்<br>முத்தைப் போன்ற பல் | ஒத்தல் |
| (6) | அவள் அழகை உடையவள்<br>இவன் புகழை உடையவன்<br>கல்வியை உடையவர் கற்றோர் | உடைமை |

தொகை:—

| | | |
|---|---|---|
| (1) | தச்சன் பெட்டி செய்தான்<br>அவன் வீடு கட்டினான்<br>இவன் பயிர் நட்டான் | ஆக்கல் |
| (2) | தச்சன் பெட்டி உடைத்தான்<br>இவன் வீடு இடித்தான்<br>அவன் பயிர் அழித்தான் | அழித்தல் |
| (3) | இவன் வீடு சேர்ந்தான்<br>அவள் பிள்ளை பெற்றாள்<br>அவன் பிணி உற்றான் | அடைதல் |
| (4) | இவன் செல்வம் இழந்தான்<br>இவன் வீடுவிட்டுப் போனான்<br>அவன் மனைவி பிரிந்துபோனாள் | நீத்தல் |
| (5) | இவள் முகம் சந்திரன் ஒக்கும்<br>கிளி போல் பேசினாள்<br>முத்துப் போன்ற பல் | ஒத்தல் |
| (6) | அவள் அழகு உடையவள்<br>இவன் புகழ் உடையவன்<br>கல்வி உடையவர் கற்றோர் | உடைமை |

இரண்டாம் வேற்றுமைக்கு இன்னும் சில பொருள்களும் இருக்கின்றன. எனினும், இப்பொழுது இதுவரையிற் கற்றால் போதும்.

இந்தச் செய்யுளில்,

உயிரும், என்பது இரண்டாம் வேற்றுமைத் தொகை. அடைதல் பொருளில் வந்திருக்கின்றது.

ஏகுவான், வினையாலணையும் பெயர். இரண்டாம் வேற்றுமைத் தொகை. ஒத்தல் பொருள்.

கோதையை, இரண்டாம் வேற்றுமை விரி. அடைதல் பொருள்.

இந்தச் செய்யுளில், கையால், மைந்தனோடு என்னும் இரண்டு பெயர்ச்சொற்களும் மூன்றாம் வேற்றுமையை அடைந்திருக்கின்றன. இரண்டாம் வேற்றுமைக்கு உருபு ஐ ஆவதுபோல, மூன்றாம் வேற்றுமைக்கு ஆல் ஆன் ஒடு ஓடு, என்பன உருபுகள் ஆகும். "தச்சன்

மரத்தால் பெட்டி செய்தான்'', அல்லது, "தட்டான் பொன்னால் நகை பண்ணினான்,'' அல்லது, "புலவன் சொற்களால் கவி பாடினான்,'' "தச்சன் மரத்தை வாளால் அறுத்தான்,'' "இவ்வழகைக் கண்ணால் பார்த்தேன்'' என்னும் உதாரணங்களை ஊன்றி நோக்கினால் ஒன்று புலப்படும். பெட்டி நகை கவி ஆகிய இப்பொருள்களைச் செய்வதற்குக் கருவியாய் இருந்தன எவையென்றும்; அறுத்தல் பார்த்தல் ஆகிய இத்தொழில்களைச்-செய்வதற்குக் கருவியாய் இருந்தன எவையென்றும், மரம் பொன் சொல் வாள் கண், என்னும் பெயர்ச் சொற்களோடு சேர்ந்த ஆல் என்னும் மூன்றாம் வேற்றுமை உருபு காட்டுகின்றது. அவ்வாறே ஆன் என்னும் உருபும் கருவியைக் காட்டும்.

எந்தக் கருவியால் ஒரு பொருள் அல்லது காரியம் செய்யப்பட்டது என்பதைக் காட்டுவதுபோலவே ஆல் என்னும் உருபும் ஆன் என்னும் உருபும் யாரால் செய்யப்பட்டது என்பதையும் காட்டும். அரசனால் கட்டப்பட்ட கோவில், தச்சனால் செய்யப்பட்ட பெட்டி என்னும் வாக்கியங்களில், ஆல் உருபு சேர்ந்து கருமத்தைச் செய்த கர்த்தாவைக் காட்டிநிற்கின்றது. இது மூன்றாம் வேற்றுமைக்குள்ள கர்த்தாவைக் குறிக்கும் பொருள்.

ஆல், ஆன், என்னும் இரண்டு உருபுகளும் கருவி கர்த்தா என்னும் பொருள்களைக் காட்டும். இனி மூன்றாம்வேற்றுமைக்கு ஒடு ஓடு என்னும் வேறு இரண்டு உருபுகளும் இவ்வேற்றுமைக்கு இருக்கின்றன. இவைகளுக்கு உள்ள பொருள் உடனிகழ்ச்சிப் பொருள். அதாவது ஒன்றோடு ஒன்று உடனாகச் சேர்ந்து வருவதைக் குறிப்பதாம். அரசனோடு மந்திரிகளும் வந்தனர். அவன் கோபத்தோடு பேசினான். பிள்ளையோடு விளையாடும் நாய். இவ் வாக்கியங்களில் உள்ள உடனிகழ்ச்சிப் பொருள் எளிதில் விளங்கும்.

கையால், என்றது இங்கு மூன்றாம் வேற்றுமை, கருவிப் பொருள். மைந்தனோடு என்பது மூன்றாம் வேற்றுமை உடன்நிகழ்ச்சிப் பொருள்.

இரண்டாம் வேற்றுமையைப் போலவே மூன்றாம் வேற்றுமையிலும் உருபு விரிந்துவந்தாலும் வரலாம் மறைந்துநின்றாலும் நிற்கலாம். தலைவணங்கினான் என்பது, மூன்றாம் வேற்றுமைத் தொகைக்கு உதாரணம். இது விரிந்தால், 'தலையால் வணங்கினான்' என வரும்.

---

காத லவர்மேலே கண்ணோட விண்ணோடும்
ஊதை யெனநின் றுயிர்ப்போட—யாதும்
உரையாடா துள்ள மொடுங்கினான் வண்டு
விரையாடுந் தாரான் மெலிந்து. 76.

பதவுரை.

வண்டு - வண்டுகள்
விரை - (பூவிலிருந்து வருகின்ற) வாசனையில்
ஆடும் - முழுகித் திரியும்
தாரான் - மாலையை அணிந்த நளன்,
காதலவர்மேலே - அந்தணனோடு அகல்கின்ற
மக்களின்மேல்
கண் - தன் கண்ணினது நோக்கம்
ஓட - செல்லவும்,
விண் - ஆகாயத்தில்
ஓடும் - அடித்து ஓடுகின்ற
ஊதை என - காற்றைப்போல
நின்று - விட்டுவிட்டு
உயிர்ப்பு - பெருமூச்சு
ஓட - ஓடவும்
மெலிந்து - தளர்ந்து
யாதும் - எதுவும்
உரையாடாது - பேசாமல்
உள்ளம் - மனம்
ஒடுங்கினான் - சோர்ந்துபோனான்.

---

மக்களைப் பிரிந்தபின் நளனும் தமயந்தியும் போய் ஒரு பாலைநிலத்தை அடைந்தனர் என்பதை அடுத்த செய்யுள் கூறுகின்றது.

சேலுற்ற வாவித் திருநாடு பின்னொழியக் [சே
காலிற்போய்த் தேவியொடுங் கண்ணுற்றான்-ஞாலஞ்
கள்ளிவே கத்தரவின் கண்மணிக டாம்பொடியாய்த்
துள்ளிவே கின்ற சுரம். 77.

---

முன் எருமையாய்ப் புட்கரனைச் சுமந்துவந்து பின் கவறாக உருண்ட கலி, அந்த வனத்தில் ஒரு பொன்னிறப் பறவையாய் இவர்களுக்கு எதிரே இப்பொழுது தோன்றினான் என்பதைக் கீழ்வருஞ் செய்யுள் கூறுகின்றது.

கன்னிறத்த சிந்தைக் கலியுமவன் முன்பாகப்
பொன்னிறத்த புள்வடிவாய்ப் போந்திருந்தான்—
[நன்னெறிக்கே
அஞ்சிப்பா ரீந்த வரசனையுந் தேவியையும்
வஞ்சிப்பான் வேண்டி வனத்து. 78.

பதப்பிரிவு:—கல் நிறத்த சிந்தை கலியும் அவன் முன்பு ஆக பொன் நிறத்த புள் வடிவு ஆய் போந்து இருந்தான் நல் நெறிக்கே அஞ்சி பார் ஈந்த அரசனையும் தேவியையும் வஞ்சிப்பான் வேண்டி வனத்து.

அன்வயம்:—கல் நிறத்த சிந்தைக் கலியும், நல்நெறிக்கே அஞ்சிப் பார்ஈந்த அரசனையும் தேவியையும் வஞ்சிப்பான் வேண்டி அவன் முன்புஆக வனத்துப் பொன் நிறத்த புள் வடிவாய்ப் போந்து இருந்தான்.

பதவுரை.

கல் - கல்லினது
நிறத்த - தன்மையதாகிய
சிந்தை - மனதை உடைய
கலியும் - கலிபுருடனும்,
நல் - நல்ல
நெறிக்கே - ஒழுக்கத்திற்கே
அஞ்சி - பயந்து
பார் - நாட்டை
ஈந்த - (புட்கரனுக்குக்) கொடுத்த
அரசனையும் - நளவேந்தனையும் [யையும்
தேவியையும் - அவன் மனைவியாகிய தமயந்தி
வஞ்சிப்பான் - வஞ்சிப்பதற்கு
வேண்டி - எண்ணங்கொண்டு
அவன் - நளனுக்கு
முன்பு ஆக - எதிராக
வனத்து - அவ்வனத்தில்,
பொன் - பொன்னினது
நிறத்த - நிறமுடைய
புள் - ஒரு பறவையின்
வடிவு ஆய் - உருவமெடுத்து



போந்து - வந்து
இருந்தான் - இருந்தான்.

விரிவுரை:—இரக்கமின்றி இவர்களை மேன்மேலும் வஞ்சித்துக் கெடுக்க வந்தானாகையால் அவனைக் 'கல் நிறத்த சிந்தைக் கலி' என்று அழைக்கின்றார். நிறம், என்ற பதத்திற்கு, மார்பு, ஒளி, குணம், வர்ணம், என்னும் பல அர்த்தங்கள் இருக்கின்றன. இங்குக் குணம் அல்லது தன்மை என்னும் பொருள் ஒன்றே பொருந்தும். கல்லினது தன்மை வாய்ந்த மனமுடைய கலி=கல்போன்ற மனமுடைய கலி, என்று பொருளாம்.

நல்நெறிக்கே அஞ்சிப் பார்ஈந்தான், என்பதால் அவன் சத்தியதருமத்திற்குக் கட்டுப்பட்டுப் புட்கரனுக்கு நாட்டை விட்டானே அல்லாது புட்கரனுக்குப் பயந்து அவன் நாட்டினைக் கொடுக்கவில்லை என்று தெரிகின்றது. நல்நெறிக்கே, என்பதிலுள்ள ஏகார இடைச்சொல், வேறெக்காரணமும் இல்லை என்று பிரித்து நல்நெறிக்கு அஞ்சியதே காரணம் என்பதைக் காட்டுவதால் அதற்கு இங்குள்ள பொருள் பிரிநிலைப் பொருள்.

குறிப்பு:—'சிந்தைக் கலியும்', என்பதில் 'சிந்தை' என்னும் பெயர்ச்சொல் இரண்டாம் வேற்றுமையில் இருக்கின்றது. வேற்றுமை உருபு ஐ விரிந்து இல்லையாகையால் இது இரண்டாம் வேற்றுமைத் தொகை. (சிந்தை, என்னும் பதத்தின் கடையில் உள்ள ஐ இரண்டாம் வேற்றுமை உருபு அன்று. மலை, தலை, மதுரை, ஆந்தை, தெரிவை, என்பனபோல் சிந்தை என்பதே பதம்)இது வேற்றுமை உருபைப் பெற்றுத் தோன்றினால் சிந்தையை என்று ஆகும். ஆனால் 'சிந்தைக் கலியும்' என்னும்தொடரில் மறைந்து இருப்பது ஐ என்னும் இரண்டாம் வேற்றுமை உருபு மாத்திரமன்று. ஏனெனில் அந்த உருபைமாத்திரம் சேர்த்துப் படித்துப் பாருங்கள்; "சிந்தையைக் கலியும்'' என்று தானே ஆகும். அப்பொழுது அர்த்தம் இல்லையே. 'சிந்தைக் கலியும்' என்னும் இவ்விரண்டு வார்த்தைகளுக்கும் இடையே மறைந்திருப்பவைகளை விரித்தால் சிந்தையை உடைய கலியும், என்று ஆகும். ஆகையினால் ஐ என்னும் உருபு தவிர உடைய என்னும் சொல்லும் மறைந்து இருக்கின்றதல்லவா! எனவே, இரண்டு பதங்கள் தொடரும்போது, வேற்றுமை உருபு மாத்திரம் மறைந்து இருக்கலாம், அல்லது வேற்றுமை உருபோடுகூட அர்த்தமாவதற்கு அவசியமான வேறு சில வார்த்தைகளும் மறைந்து இருக்கலாம். வேற்றுமை உருபுமாத்திரம் மறைந்திருந்தால் அந்தத் தொடரை வேற்றுமைத்தொகை என்போம். உருபோடுகூடவேறு ஓர் வார்த்தையும் மறைந்திருந்தால், உருபும் பயனும் உடன் தொக்க தொகை என்போம். இப்படியே இவ் இருவிதமான தொகைகளும் இரண்டு மூன்று நான்கு ஐந்து ஆறு ஏழு ஆகிய எல்லா வேற்றுமைகளிலும் வரும்.

மீன் விற்றான்:—மீன் என்பது இரண்டாம் வேற்றுமைத்தொகை; 'மீனை விற்றான்' என்று ஐ உருபை மாத்திரம் விரித்தாலும் அர்த்தம் தெரிகின்றது. ஆகையால் இரண்டாம் வேற்றுமைத் தொகை ஆகும்.

மீன் வலை:—இங்கும் மீன் என்பது இரண்டாம் வேற்றுமையில் தான் இருக்கின்றது. ஆனால் 'மீனை வலை என்று ஐ உருபைமாத்திரம் விரித்தால் பயனில்லை. இந்தத் தொடர் அர்த்தம் ஆகவேண்டுமானால், மீனைப் பிடிக்கும் வலை' என்று பிடிக்கும் என்னும் ஒரு சொல் வருவிக்கவேண்டியது அவசியமாகின்றது. ஆகையால் இது, இரண்டாம் வேற்றுமை உரும் பயனும் உடன் தொக்க தொகை.

இப்படியே மூன்றும் வேற்றுமையிலும் வரப் பார்க்கலாம். தலை வணங்கினான்:—இது விரிந்தால்'தலையால் வணங்கினான்' என்று ஆகும். ஆல் என்னும் மூன்றும் வேற்றுமை உருபு மாத்திரந்தான் மறைந்து நிற்கின்றது. ஆகையால் மூன்றும் வேற்றுமைத் தொகை.

மரப் பெட்டி:—இது விரிந்தால்,'மரத்தால் பெட்டி' என்று ஆகாது. 'மரத்தால் செய்த பெட்டி' என்றே ஆகும். செய்த என்ற சொல்லும் மறைந்திருப்பதால் இது மூன்றும் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்க தொகை.

---

## நம்மாழ்வார் வைபவம்

### திருவாய்மொழி

[686-வது பக்கத் தொடர்ச்சி]

3-ம் பத்து 7-ம் தசகம்.
7-ம் பாசுரம்.

சன்மசன் மாந்தரங் காத்தடி
யார்களைக் கொண்டுபோய்த்
தன்மை பெறுத்தித்தன் றாளிணைக்
கீழ்க்கொள்ளு மப்பனைத்
தொன்மை பிதற்ற வல்லாரைப்
பிதற்று மவர்கண்டீர்
நன்மை பெறுத்தெம்மை நாளுய்யக்
கொள்கின்ற நம்பரே.

உரை:—சன்ம சன்மாந்தரம் - நடப்பு ஜன்மம் அதற்கு முன்ஜன்மம் அதற்கும் முன்ஜன்மம் முதலான ஜன்மங்கள்தோறும், காத்து-அவர்கள் அவர்கள் தம் பூர்வஜன்மத்தில் யத்நபூர்வக மாகவோ, தாங்கள் நிச்சயித்து நினைக்காமலோ செய்த நன்றிகளின் பயனாக, பக்தர்களைக் குருவினருளாலும் நல்ல உணர்ச்சிக் கொடையினாலும் இரக்ஷித்து, அடியார்களை-தாஸர்களை, கொண்டுபோய்-அர்ச்சராதி மார்க்கத்தாலே, கீதாசாரியன் பணித்ததுபோல் "நயாமி பரமாங் கதிம்'' என்ற நியாயத்தால் வைகுண்டத்திற்கு அழைத்துப்போய், தன்மை - தட்டுத் தடங்கல் இல்லாத அகண்ட ஞான சுவரூபத்தை, பெறுத்தி-அடையும்படி செய்து, தன் தாளிணைக்கீழ்க் கொள்ளும்-தன் ஸேவையையே முக்கிய பிரயோஜனமாக்கும், அப்பன் - தந்தை போன்ற எம்பெருமானது, தொன்மை - அநாதியாயும் ஸஹஜமாயுமிருக்கும் அஸாதாரண மஹிமையை, பிதற்றவல்லாரை - துதிக்கின்றவர்களை, பிதற்றுமவர் கண்டீர் - கிரமாக்கிரமம் இல்லாதே துதிசெய்யும் பக்தர்களை, நன்மை பெறுத்து - ஸ்ரீயையும் கீர்த்தியையும் அடைவித்து, நாள் - எப்பொழுதும், எம்மை - நம்மை, உய்யக்கொள்ளும்-பாகவதர்களுடைய அசாதாரணமான தாவலிய ஸம்பத்தை நமக்குத் தந்து அதையே இருமை

கரித்து, பாகவதர்களுக்கு நாம் அடியோமென்கிற ஸம்பத்தை ஊர்ஜிதப்படுத்துவார், நம்பர்-நம்மைக் கைவிடாமல் இரக்ஷிப்பவர்.

குறிப்பு:—இப்பாசுரத்திற்கு ஆறாயிரப்படிஉரை மிகவும் இணக்கமாயிருப்பதுபற்றி அதனை இங்கெடுத்து வரைவோம்:—"ஜன்மங்கள்தோறு மிந்த லோகத்திலே தானும் வந்து பிறந்தருளி ஆச்ரிதரை ரக்ஷித்து, பின்னையுமவர்களைக்கொண்டுபோய் ஒட்டும்சங்கோஜமில்லாத ஞானவான்களாக்கித் தன் தாளிணைக் கீழ்க் கொள்ளுமப்பனுடைய இந்தச் சுபாவிகமான குணத்தைப் பிதற்ற வல்லாரைப் பிதற்றுமவர் கண்டீர் அடியார்களுக்கே தாஸியனாகும் ரஸமாகின்ற சம்பத்தை நமக்குத்தந்து அதை நித்தியவஸித்த மாக்குவ ரென்கிறார்".

—

8-ம் பாசுரம்.

நம்பனை ஞாலம் படைத்த வனைத்திரு மார்பனை
உம்ப ருலகினி லார்க்கு முணர்வரி யான்றன்னைக்
கும்பி நரகர்க ளேத்துவ ரேனு மவர்கண்டீர்
எம்பல் பிறப்பிடை தோறெந் தொழுகுலந் தாங்களே

உரை:—நம்பனை - நம்பத் தகுந்தவனை, ஞாலம் படைத்தவனை - உலகங்க ளெல்லாவற்றையும் சிருஷ்டித்தவனை, திரு மார்பனை - இலக்குமியை மார்பில் தரித்தவனை, உம்பர் உலகினில்-ஸத்தியலோகத்திலும் தேவலோகத்திலும், ஆர்க்கும் - எவ்வளவு உத்கிருஷ்டாராலும், உணர்வு அரியான்தன்னை-தெரிந்துகொள்ள முடியாதவனை; ஏத்துவர்-துதிசெய்பவர், கும்பி நரகர்களேனும்-கும்பியாகிய நரகத்தினில் சேர்க்கும் பாவங்களைச் செய்தவர்களானாலும்; அவர் தாங்களே-அவர்களே; எம் பல பிறப்பிடைதோறும் - எம் பல பிறவிகளிலும்; தொழு - நாங்கள் வணங்கத்தகுந்த, குலம் கண்டீர் - குலத்தாராவார்.

குறிப்பு:—இந்தத் தசகத்தில் இப்பெரியாரான ஆழ்வார் பகவத் பக்தர்கள் தமக்கு உத்தம சுவாமிக ளென்கிறார். பக்தர்கள் பெரும்பாலும் ஸாதுக்களாயும் நல்நடத்தையும் செம்மையான சித்தவர்த்தியுமுள்ளவர்களாயிருப்பர்களென்று சொல்ல அவசியமில்லை. ஆகையால் இதுவரையில் எடுத்துரைத்த பகவானது நன்மையைப் பிதற்றும்பக்தர்கள் சிறந்த ஸாத்வீகர்களாகவே ஆழ்வாரது திருவுள்ளத்தில் பட்டதாகக் கொள்ள வேண்டும். மேல்பாசுரத்தில் அந்த நல்ல ஸாதுபக்தர்கள் பாகவததாஸியத்தில் நம்மைநிறுத்திப் பகவானது தண்ணருளால் வைகுண்டத்தைச் சேரப் புருஷாகாரமாயிருப்பாரென்று எடுத்துரைத்தார். இத்துடன் இச்சரித்திரம் முடிவுபெற வேண்டும். ஆயினும், இப்படி நம்மைத் தாஸியரஸத்தில் மூட்டும் பக்தர்கள் வெகு பாபச் செய்கைகளைச் செய்திருந்தால் அவர்களை நாம் நன்கு மதிக்கலாமோ வென்ன, ஆம் - நன்கு மதிக்கலாம்; அன்னவர் வந்திக்கவும் தொழவும் யோக்கியரே யென்று இப்பாசுரத்தில் கூறுகிறார். ஏனெனில் அவர் தம்மைப் பகவான் திருத்திப் பணிகொள்வான். பகவத் பக்தி என்னும் தேஜஸு அவர்களது ஸகல பாபங்களையும் கிரமேண போக்கடிக்கும். அது எப்படியானாலும் ஆகுக. நாம் அவரைக்கண்டு திருந்தவேண்டிய அம்சம் பகவத்பக்தி ஒன்றே; மற்ற அவரது துர்க்குணத்தை நாட நாமதிகாரியல்லோம். நாடினால் சாஸ்திரப்படி அவரது பாபத்தில் நாம் பங்காசார மடையவேண்டி வரும். இவர்களுடைய பாபங்களைப் பகவானே கண்ணோட்டம்செய்ய வோர் பிதாவின்ஸ்தானத்தில் நிற்கின்றான். நாமெல்லோரும் இளையோம். தம்பிகளாகிய நாம் அண்ணன்மார் குற்றத்தைப் பாராட்டுவது எவ்விதத்திலும் தகுதியன்று—என்பது பெரியாரின் திருவுள்ளமென அறிக. பகவானே "என்னடியார் அது(தீச்செயல்)செய்யார்; செய்தாரேல் நன்று செய்தார்" என்று பணித்திருப்பதாக வேறொரு ஆழ்வார் கூறியிருப்பதும் இங்குக் கவனிக்கத் தக்கது. "நன்று செய்தார்" என்பதற்கு அர்த்தம்—ஊழ்வினையின் வசப்பட்டு அதுசெய்தாரே அன்றி நிச்சயித்த தீதான எண்ணத்தால் முயன்று செய்ததன்று என்பது திருவுள்ளம். பாஞ்சராத்திரத்தில்பகவானே "மந்நிமித்தம் கிருதம் பாபம் அபிதர்மாய கல்பதே" என்று பணித்துளதும் இங்கு நம்ஞாபகத்துக்கு வரத்தக்கது. இங்குக் குறித்துப் பிரஸ்தாபிக்கும் பாபம் "தீசெயல்" பற்றி அல்லதேனும், சாஸ்திரத்தைப் பற்றிவரும் தோஷமேயாயினும் பகவானது கண்ணோட்டமுடைய உயர்குணத்திற்குத் தக்க அறிகுறியாக எடுத்தோம். மற்றொரு தத்துவமும் இதனிலுளது. அதாவது, முன்சென்மங்களில் செய்த பாபங்களை வேதாந்திகள் மூன்று விதமாகப் பிரித்துளார். அவையாவன:—சஞ்சிதம் (பழைய பாவங்கள் கூட்டமாய்ச் சேர்ந்துளது.) 2 பிராரப்தம் (தற்காலம் நல்லதோ கெட்டதோ ஓர் பலனைக் கொடுத்துக்கொண்டு அநுபவிக்கப் படுகின்றது) 3 ஆகாமியம் (இனி அநுபவத்துக்குரியது) பக்தர்களுக்குப் பக்தியோகம் உபக்கிரமித்தவுடன் 1-ம் 3-ம் இடர்பாடு செய்யாதபடி ஈசன் சங்கல்பிக்கின்றான். ஆகையால் தீச்செயலான பாவகர்மங்களைச் செய்த பக்தர்களுக்கு 1-ம் 3-ம் அணுகித் துயர்படுத்த ஏலாது. பிராரப்தமாய்ச் செய்யவேண்டிவந்த கருமத்தை முயலாமல் விட்டுவிடவும் ஏலாது. ஆகவே இவர் பழிக்கத்தக்கவர்கள் அல்லர்.

—

9-ம் பாசுரம்.

குலந்தாங்கு சாதிகள் நாலிலுங் கீழிழிந் தெத்தனை
நலந்தா னிலாத சண்டாள சண்டார்க ளாகிலும்
வலந்தாங்கு சக்கரத் தண்ணல் மணிவண்ணற்காளென் [றுள்
கலந்தா ரடியார் தம்மடி யாரெம் மடிகளே.

அவதாரிகை:—சண்டாளராய் ஜாதியில் தாழ்ந்திருந்தாலும் பகவானிடத்தில் உள்கலந்த பக்தர்களின் அடியார் நமக்கு ஸ்வாமிகளென்று இந்தப்பாசுரத்தில் உறுதி உரைக்கார். முன்பாசுரத்தில் எடுத்துரைத்த பக்தர்கள் அவர்தாம் செய்த பாவங்களினால் தாழ்ந்தவர். அவர்களும் நம்ம ஸ்வாமிகளாகத் தடையில்லை என்றார்.

உரை:—தம்முடைய வலதுகையில் சக்ராயுதத்தை ஏந்தியிருக்கும் மணிவண்ணன் எம்பெருமானுக்கு அடிமைசெய்யும் இதுவே பிரயோஜனமாக உள்கலந்தவர் ஜாதி ஆசாரம் இவைகளிலே எவ்வளவு தாழ்ந்தவர்களேயாயினும் இவர்களுக்குத் தொண்டுசெய்யும் தாஸர்களே நம் ஸேவைக்கு உரித்தானவர்.

—

10-ம் பாசுரம்.

அடியார்ந்த வையமுண் டாலிலை யன்னவசஞ் செய்யும்
படியாது மில்குழவிப் படியெந்தை பிரான்றனக்
கடியார் தம்மடி யாரடி யாரடி யார்தமக்
கடியா ரடியார் தம்மடி யாரடி யோங்களே



பதக்குறிப்பும் உரையும்:—அடியார்ந்த வையம்-பகவானது திருப்பாதத்துக்கு அளவான லோகம்-அதாவது திருவிக்கிரமாவதாரத்தில் ஸ்ரீபாதங்களால் அளப்பதற்கு ஈடாயிருந்த வையகத்தை, பிரளயதெசையிலே ஒக்க விழுங்கி அதை ஜீரணிக்கும் நிமித்தம்போல் வலக்கையைக் கீழாகவைத்துச் சின்ன சிசுவின் ஆகார வடிவெடுத்து ஓர் ஆல் இலையில் கண்வளர்கின்ற ஆச்சரியமான சிறு குழவியினது ஸௌந்தரியத்துக்கு ஈடுபட்டு அடிமையாயிருக்கும் பக்தர்கள் அடியாரடியார் தம் மடியார் அடியார்தமக்கு அடியார்தம் மடியா ராகுவோம் நாங்களே

—

11-ம் பாசுரம்.

அடியோங்கு நூற்றுவர் வீயவன்
றைவர்க் கருள்செய்த
நெடியோனைத் தென்குரு கூர்ச்சட
கோபன் குற்றேவல்க
ளடியார்ந்த வாயிரத் துள்ளிவைபத்
தவன்றொண் டர்மேல்
முடிவாரக் கற்கிற்கில் சன்மம் செய்
யாமை முடியுமே.

பொழிப்புரை:—இராஜ்ய மிழந்திருந்த பஞ்ச பாண்டவர்கள் பொருட்டாக வாத்ஸலியத்தாலே அவர்களுக்கு விரோதிகளான இறுமாப்படைந்த நூற்றுக்கணக்கான துரியோதனாதிகளை நிரஸித்தருளின எம்பெருமானுடைய வாத்ஸலியம் ஸௌசீலியம் முதலான பற்பல கல்லியாணகுணங்களுக்கு ஈடுபட்டுப் பக்தர்களாயிருப்பவர் எவரேனும் அவர் உண்மையான பக்தர்களானபடியால் அவர்களுக்குத் தாஸராயிருக்குமொரு தன்மையே பரம புருஷார்த்தமென்று முடிவுகட்டிய இந்தத் திருவாய்மொழியைக் கற்கச் சக்தர்களானால் அவர்களுக்குப் பாகவத தாஸியத்தை உறுதிப்படுத்தி மோக்ஷத்திற்கும் வழியாகும்.

விசேஷக் குறிப்பு:—ஆழ்வார் இப்பத்தில் 9-பாட்டு வரையில், பக்தர்கள் பகவானுக்கு ஆள்ஆவதுபோல் அவனது பக்தர்களுக்கும் உரிமையாக வேண்டுமென்று உபதேசித்து முடித்தார். ஆனாலும், சென்ற 6-ம் பத்து 10-ம் பாட்டாகிய "கடல் வண்ணன்" என்கிற பாட்டில் "வெஞ்சமரில் தேர்கடாவிய பெருமான் கனைகழல் காண்பதென்றுகொல் கண்களே" என்றல்லவோ இவர் ஆசை பட்டார். இந்த ஆசையே மிகுதியும் ஆழ்வாருக்குப்புத்தியஸ்தமாயிருப்பதுபற்றி அந்தத்திருப்பாதங்களையே நனிநினைந்து திருவிக்கிரமாவதாரத்தில் அத் திருப்பாதங்களாலேயே ஜகத்தை அளந்ததைப் பத்தாம் பாட்டில் துதிசெய்து பின்னும் ஆற்றாமையால் பாண்டவருக்குத் தேர்கடாவிய ஸௌலப்பியத்தையும் ஆச்ரித வாத்ஸல்லியத்தையும் உட்கொண்டு திவ்விய ஸௌந்திரியமுள்ள ஸ்ரீ கிருஷ்ணபகவானது திவ்விய "கனைகழல்" தம் திருவுள்ளத்தைக் கவருவதை ஸூசிப்பிக்கின்றார்.

—§—

# ஷெல்லி

[691-வது பக்கத் தொடர்ச்சி]

மாசற்ற காலைவேளையில் ஆகாயத்தில் உண்டான பிளவின் வழியாக, காற்று வெளிக்கிளம்பிய விடத்தில் சூரியோதயத்தின் கிரணங்கள், தங்கு தடையின்றியும் கூர்மையாகவும் பொன்னிறமாகவும் சுத்தமாகவும் தெளிவாகவும் விழுகின்றன. வெளிச்சம் காற்று முதலியவைகளின் சைனியங்களை நிகர்க்கும் அந்தச் சூரியகிரணங்கள் ஒரு வாயிற்படியில் ஒன்றினை மற்றொன்று சந்திப்பதன்றியும் ஒன்றோடு மற்றொன்று சேர்ந்திணைந்து ஊடுருவிச்செல்கின்றன. புயல்காற்றில் உண்டான சிதைவும் பிளவும் விசாலப்பட்டிருக்கின்றன. மேகத்தில் உள்ள குகைகள் பகலால் கிழிக்கப் பட்டிருக்கின்றன. கடுமையான காற்று, களைப்புற்ற தனது இறக்கைகளை அசைத்தவண்ணமாய் முணுமுணுத்துக்கொண்டே ஒலியொடுங்கி அமிழ்கின்றது. ஊசலாடும் கடலில் எறிகின்ற கண்ணாடியனைய நீண்ட அலைகள், உயரக்கிளம்பி அழகுதிகழினும் பார்வைக்கு வெருவரு தோற்றமுடையனவாகவும் இருக்கின்றன. பொன்னின்புகைபோலச் சூரியோதயத்தில், புயல் காற்றின் அழிவுகள் நாசமாகின்றன. கும்பல்கும்பலாகக் கிடக்கும் அலைகள், நீலநிறமான ஆகாயத்தின் ஆழ்ந்த நிசப்தம் மேலே விஸ்தாரமாகப் பரவுவதைக் கண்ணுறுகின்றன. மெய்க்காதல் தங்குதலால், காமக்குரோத லோபமோக மத மாச்சரியங்கள் நிச்சப்த மடைவது போல, ஆகாயத்திலுள்ள நிச்சப்தம் பரவிக்கிடந்தது. இந்நிச்சப்தம் கடலின் மேற்பரப்பினடியில்பிரதிபலித்துக்கொண்டு மெதுவாகநடுங்கிச் சறுக்கிக்கொண்டே செல்லுகின்றது. தண்ணீராகிய விசாலமான உலகம் தனது அலையை அகலப்படுத்தி, ஆண்டிஸ் மலையிலிருந்து அட்லாஸ்மலை வரைக்கும், வரைத்தொடர்களைச் சுற்றிலும், தீவைச் சுற்றிலும், கடற்பறவைகளைச் சுற்றிலும், கப்பல்சிதைவுகளைச் சுற்றிலும், ஆகாயத்தின் நீலவர்ணமான புன்சிரிப்புடன் அலம்புகின்றது.

கப்பல் எங்கே இருக்கின்றது? அலையின் எல்லையில் ஒரு புலி ஒரு கடற்பாம்புடன் பயங்கரமான சண்டையிற் கலந்திருக்கின்றது. சண்டையின் நுரைகளும் புகையும்தெள்ளிய காற்றைச்சூரியனது அம்புகளுடன் கறைப்படுத்துகின்றது; பாம்பானது இறுக்கி நெருக்கி நொறுக்கி அழுத்துதலால் புலியின் திடமான எலும்புகள் துகள் துகளாக உடைகின்றன. சூடான இரத்தத்தின் முணுமுணுப்பு, ஆறாகவும் மழையாகவும் புலியின் கைகளால் பிடிபட்டு, அதன் கூரியநகங்கள் கீறிய நரம்புகளினிடமிருந்துபொழிகின்றது. புலியினது நரம்புகளும் தசைநார்களும், முயற்சியாலும் கோபாவேசத்தாலும் பலத்தாலும், முறையே முறுக்கேறியும் நிமிர்ந்தும் இருக்கின்றன. புலியும் பாம்பும் தண்ணீரில் சுழன்றதும் தண்ணீரைநாலாபக்கமும் அடித்ததும் ஒரு பயங்கரமான இயந்திரம், மெல்லிய காற்றையும் மென்மைத் தன்மைத்தான அலைகளையும் இடியாகத் தகர்த்து மசிப்பதுபோல இருந்தது. புலியின் முழக்கங்களும், பாம்பின் சீறல்களும் சமுத்திரத்தின் சமமான ஆறுகளின்மேல்வேகமாய்நகர்ந்துசெல்கின்றன. இத்தகைய கொந்தளிப்புக் கருகில் ஒரு நீலநிறமான சுறுமீன் நீலநிறமுடைய சமுத்திரத்திற்குள் தொங்கிக்கொண்டிருக்கின்றது. சமுத்திரம், இச்சண்டையில்

வெற்றியுற்ற தனது மீன் சிறகுகளான இறக்கைகளையுடைய சமாதி நிலையமாகும்.

இன்னொரு சுறுமீன் தனது சகோதரனது விதியினின்றும் தப்பித்துக்கொண்டு நம்பிக்கை யிழந்ததாலுண்டாகும் வேகத்துடன் தன் னிருப்பிடம்நோக்கிச் செல்லுகின்றது. அதோ! படகு ஒன்று அவ்விடம் நெருங்கி வருகின்றது; பன்னிரண்டு படகோட்டிகள் எண்ணத்தாலுண்டாகும் ஊக்கத்துடன் அப்படகின் கூரிய அடிப்பாகத்தின்மேல், உப்புநுரைகளை அதிக வேகமாய்த் தள்ளுகின்றார்கள். படகினது பின்தட்டில் குறிபார்த்துச் சுடும் மூவர் தங்கள் நெடிய துப்பாக்கிகளைப் பிடித்துக்கொண்டு நிற்கின்றனர். சூடான குண்டுகள் புலியின் மார்பினுள் புதைந்து சுடுகின்றன. அதனோடு அவை இன்னும் புலியின் அடைக்கலத்திற்கும், அழிவுக்கும் பிடர் பிடித்துத் தள்ளிக்கொண்டு செல்கின்றன. கப்பலின் அழிவில் எஞ்சிய ஒரு துண்டு மட்டும் அமிழ்ந்தும் குறைந்தும், எல்லாம் மறைந்து போய்விட்டது என்று சொல்லுகிற அளவு கடலுக்கு வெளியே ஒரு சிறிது தோன்றும்படி தலைநிமிர்ந்து நிற்கின்றது. கப்பலின்கண் தனித்திருந்த அம்மாதராள் தன்னுடைய இடதுகையால், அந்த மரத் துண்டைக் கெட்டியாகப் பிடித்துக்கொள்ளுகிறாள். தனது வலது கையால் அவள் தன் இனிய குழந்தையைப் பிடித்துக் கொள்ளுகின்றாள். மரணம், பயம், காதல், அழகு முதலியன வெல்லாம் ஆண்டு ஒன்று கூடிக் கலந்திருந்தன. அவை யனைத்தும், அஞ்சிய அனலென மிக நடுங்கி வெருவிய அவள் கண்களையும் ஒள்ளிய அவள் கரங்களையும் சுற்றி எரிகின்றன. அவளது குழந்தை தண்ணீருக்குமேல் ஒரு வால்நக்ஷத்திரத்தைப்போல இன்னும் புன்முறுவல் பூத்து விளையாடி முணுமுணுத்துக்கொண்டு இருக்கின்றது; அதைப் போலவே நம்பவொண்ணா அத் திரையாழி புயலுக்குமுன் சிரித்தது, விளையாடிற்று, முணுமுணுத்தது. ஒரு சகோதரனும் சகோதரியும்போல அந்தக் குழந்தையும் சமுத்திரமும் இன்னும் ஒருவருக்கொருவர் புன்முறுவல் செய்து கொண்டிருக்கின்றனர்.

## முருகன் போற்றி மாலை

[696-வது பக்கத் தொடர்ச்சி]

பாசிழை பசிக்கு தென்னப்
பைந்தினை யிடியுந் தேனும்
ஆசையோ டளிக்க வுண்ட
அரகர முருகா போற்றி. 73.

காந்தக மனைய கண்ணாய்
நம்பசி போய திப்போ
சேர்ந்துள விடாய்தீ ரென்ற
சிவசிவ முருகா போற்றி. 74.

இவ்வரை யேழுக் கப்பா
லினியபூஞ் சுனையுண் டென்ன
அவ்வரை காட்டென் றோதும்
அரகர முருகா போற்றி. 75.

விரைகமழ் சுனைநீ ருண்டும்
விட்டிடா விரக தாகந்
தெரியிழாய் தீர்ப்பா யென்ற
சிவசிவ முருகா போற்றி. 76.

தேனையே யனைய தீஞ்சொற்
சேயிழை தனங்கள் தோய
ஆனைமா முகனை வேண்டு
மரகர முருகா போற்றி. 77.

அம்மைகொம் பிரண்டும் பின்முன்
னானைகொம் பிரண்டு மூன்றச்
செம்மைசேர் தாணி னின்ற
சிவசிவ முருகா போற்றி. 78.

மூவிரு முகமுங் கண்ணும்
மொய்ம்புபன் னிரண்டும் நெஞ்சும்
ஆவியு முருகக் காட்டு
மரகர முருகா போற்றி. 79.

ஏருறு புனத்தி னீங்கி
யிற்புகு மிறைவி தன்னைச்
சீருறு களவிற் கொண்ட
சிவசிவ முருகா போற்றி. 80.

குன்றவர் சீறி யாறிக்
குலமுறை கொடுப்பக் கொண்டே
அன்றவர்க் கருளை நல்கு
மரகர முருகா போற்றி. 81.

வல்லியோ டினிதி னேகி
வானவர் விரும்பி வாழும்
செல்லுயர் தணிகை சேர்ந்த
சிவசிவ முருகா போற்றி. 82.

முருந்தன முறுவ லாட்கு
மூன்றுபூ மலரும் வெற்பின்
அங்கதை யனைத்துங் கூறு
மரகர முருகா போற்றி. 83.

கந்தவெற் பதனிற் சென்று
கற்பக வல்லி போற்றச்
செந்திரு மானைக் காட்டும்
சிவசிவ முருகா போற்றி. 84.

வள்ளியின் காதை முற்றும்
வாரணம் வினவிக் கேட்ப
அன்னாறு மகிழ்விற் கூறு
மரகர முருகா போற்றி. 85.

தருவென விரண்டு கொம்பு
தாவிடப் பூத்துக் காய்த்துத்
திருவரு ளுயிர்க்கு நல்கும்
சிவசிவ முருகா போற்றி. 86.



புன்னெறி யதனிற் செல்லும்
போக்கினைப் போக்கி மேலாம்
அந்நெறி யொழுகச் செய்வாய்
அரகர முருகா போற்றி. 87.

கருவடி வகற்றி யின்பங்
கைவரக் கருணை பூத்துத்
திருவடி சூட்டி யாள்வாய்
சிவசிவ முருகா போற்றி. 88.

நாறுபூங் கடப்பு சூடு
நாதனே யுன்னை யன்றி
ஆறுமா முகம்வே றில்லை
அரகர முருகா போற்றி. 89.

நல்லையுங் கதிரை வெற்பும்
ஞானவா காய மான
தில்லையுங் கோயில் கொண்ட
சிவசிவ முருகா போற்றி. 90.

செய்யனே கந்தை தந்த
சேயனே குகனே செவ்வேல்
ஐயனே மெய்யர் மெய்யே
அரகர முருகா போற்றி. 9I.

கார்த்திகை சிறுவா மூலக்
கணபதி துணைவா கந்தா
தீர்த்தனே சிலம்பி லாடும்
சிவசிவ முருகா போற்றி. 92.

குழகனே யிளமை நீங்காக்
குமரனே குறைவி லாத
அழகனே யமுதே தேனே
அரகர முருகா போற்றி. 93.

நம்பனே விசாக நன்னாள்
நாதனே நாள்கோள் மாற்றும்
செம்பொனே மணியே முத்தே
சிவசிவ முருகா போற்றி. 94.

பழவினைத் தொடர் பினாலே
பதைபதைப் பேனை யெந்த
அளவினி லாள்வா யையா
அரகர முருகா போற்றி. 95.

ஐம்புலத் தாசை நீக்கி
யருட்புலத் தாசை சேரச்
செம்புலச் செல்வந் தாராய்
சிவசிவ முருகா போற்றி. 96.

முன்புசெய் வினைக ணீக்கி
முண்டகத் திருத்தாள் போற்றும்
அன்பினை அருள வேண்டும்
அரகர முருகா போற்றி. 97.

உருப்பெற முடியா தென்னால்
உன்னடி யுதவிக் காப்பாய்
திருப்பரங் குன்றின் மேவும்
சிவசிவ முருகா போற்றி. 98.

சோதியே யன்ப ருள்ளத்
தாமணி விளக்கே தேவர்க்
காதியே யலைவாய் மேவு
மரகர முருகா போற்றி. 99.

ஏரகத் தையர் போற்று
மிறைவனே யிருணோய் மாறச்
சீரகத் தொளியை யீவாய்
சிவசிவ முருகா போற்றி. 100.

காவின னரியே யேற்றுக்
கடவுளும் போந்து காண
ஆவினன் குடியில் மேவு
மரகர முருகா போற்றி. 101.

ஒருமலை யெறிந்த வேலா
வுளமலை வெறிந்து காப்பாய்
திருமலை தோறு மாடும்
சிவசிவ முருகா போற்றி. 102.

இழுமெனு மருவி பாயும்
இன்பழ முதிர்ந்த சோலை
அழகிய கனியே யெங்க
ளரகர முருகா போற்றி. 103.

கட்டெழிற் காஞ்சிக் கந்த
வனத்திலே கருணைத் தீம்பால்
இட்டருக் குண்ண நல்கும்
சிவசிவ முருகா போற்றி. 104.

துட்டநோய் பிறவித் துன்பம்
சூழ்மிடி துரத்திக் காக்க
அட்டமா கிரியில் வாழு
மரகர முருகா போற்றி. 105.

ஆக்கையுன் னுடைமை யானுன்
னடிமையா னவங்கள் மாயத்
தீக்கைசெய் தென்னை யாள்வாய்
சிவசிவ முருகா போற்றி. 106

செம்மைசேர் முகங்கள் போற்றி
சேர்ந்தபன் னிருதோள் போற்றி
அம்மைமா ரிருவர் போற்றி
அரகர முருகா போற்றி. 107

ஆறிரு தடந்தோள் போற்றி
யயில்மயில் சேவல் போற்றி
சீறடி யிரண்டும் போற்றி
சிவசிவ முருகா போற்றி. 108

செந்தமிழ்ப் புலவ நாயேன்
செப்பிய மாலை சூடி
எந்தமை யுய்யக் கொள்வா
யிணையடி போற்றி போற்றி.

முடிவிலா முருகன் வாழி
முத்தமிழ்ச் செல்வி வாழி
அடியவர் வாழி யெங்கும்
அருணெறி தழைத்து வாழி.

(முற்றிற்று)

# ஜூலியஸ் ஸீஸர்

## [ஓர் ஷேக்ஸ்பியர் நாடகம்]

[694-வது பக்கத் தொடர்ச்சி]

### அங்கம் 4. களம் 3.

காஸ்ஸியஸ்:—என தன்னை எனக்குத் தந்த அந்த மூர்க்கருணம் என்னையே யான் மறக்கும்படி செய்கின்றபோது, என்னைப் பொறுத்திருப்பதற்குப் போதிய அன்பு உனக்கில்லையோ? (1)

ப்ரூட்டஸ்:—ஆம், காஸ்ஸியஸ்; இனிமேல், உன் ப்ரூட்டஸின்பால் நீ ஊக்கம் விஞ்சி உரையாடும் போது, உன் அன்னையே வைகின்றாளென்று உட்கொண்டு அவன் உன்னைச் சும்மா விட்டுவிடுவான். (2)

[உள்ளே ஆரவாரம்]

ஒரு புலவன்:—[உள்ளே] தலைவர்களை நான் உட்சென்று காணவேண்டும். அவர்களுக்கிடையே யாதோ வன்மமொன் றுளது; அன்னவர் தனியேயிருப்பது தகுதியன்று. (3)

லுஸிலியஸ்:—[உள்ளே] நீ அவர்கள்பால் போக லாகாது.

புலவன்:-[உள்ளே]மரணமேயன்றி என்னை வேறொன்றுந் தடுக்க இயலாது.

லுஸிலியஸும், டிடினியஸும், லூஸியஸும் தொடர, புலவன் வருகின்றான்.

காஸ்ஸியஸ்:—என்னிது! யாது விடயம்?

புலவன்:—ஏ தலைவர்காள், வெட்கமில்லையோ உங்களுக்கு! என் கருதி இது புரிகின்றீர்? நம்போன்ற இருவர் இருக்கவேண்டியதுபோல்,

அச்பு பூண்டுநீர் நண்பரா
  யமையுங்கள் நானே
நிச்ச யம்பல வாண்டுகள்,
  நிரம்பக்கண் டுளேனல் (4)

காஸ்ஸியஸ்:—ஹ ஹ! எத்துணை விகாரமாய் இந்த அழுமூஞ்சி தன் எதுகையை அமைக்கின்றான்.

ப்ரூட்டஸ்:—போடா இதைவிட்டு, ஏ குறும்புப் பயலே போடா.

காஸ்ஸியஸ்: —அவனை முனியாதே, பொறுத்துக் கொள் ப்ரூட்டஸ்; அது அவன் மரபு (5).

ப்ரூட்டஸ்:—வேளையறிந்து அவன் வந்தால், நானும் அவன்மரபு அறிவேன் (6). போரின் இடையே இக்கூத்தாடி மடையர்களுக்கு என்ன வேலை!—நண்பா, ஓடிப்போ (7).

காஸ்ஸியஸ்:—போ, போ, போய்விடு.

[புலவன் போகின்றான்].

ப்ரூட்டஸ்:—லுஸிலியஸ், டிடினியஸ், சைனியங்கள் இவ்விரவு தங்குதற்குத் தக்க விடம் அமைத்துத் தரும்படி படைத்தலைவர்களுக்குச் சொல்.

காஸ்ஸியஸ்: —சொல்லி, மஸ்ஸாலாவை இப்பொழுதே எம்பால் அழைத்துக்கொண்டு நீங்களும் வாருங்கள். (8)

[லுஸிலியஸும் டிடினியஸும் போகின்றனர்.]

ப்ரூட்டஸ்: —லூஸியஸ், ஒரு வள்ளம் மதுக் கொண்டுவா. (9)

[லூஸியஸ் போகின்றான்.]

(1) என் அன்னை முன்கோப முடையவள். அவளிடத்திலிருந்து நான் இக்குணத்தைப் பெற்றிருக்கின்றேன். ஆதலின், வெகுளியால் நான் மெய்ம்மறந்து சில போது உன்னைச் சினந்துபேச நேருமாயின் அன்புடன் நீ என்னைப்பொறுத்துக்கொள்ளமாட்டாயோ-என்பது பொருள்.

(2) தாயினிடத்திலிருந்துதான் தன் கோபகுணத்தைப் பெற்றிருக்கின்றானென்று காஸ்ஸியஸ் முன்னர்ச் சொன்னதை இங்கு ப்ரூட்டஸ் விளையாட்டாகப் பரிகசிக்கின்றான். "இனி நீ என்பால் வன்புடன் பேசினால், என்னை வைவது நீயின்றி உன் அன்னையே என மதித்து உன்னை நானொன்றும் செய்யமாட்டேன்"—என்பது பொருள்.

(3) இதற்கிடையில், அவர் பரிவாரத்திலிருந்த புலவனொருவன், ப்ரூட்டஸிற்கும் காஸ்ஸியஸிற்கும் இடையே ஏதோ மனவேறுபாடு நேர்ந்திருக்கின்றதென்பதை எவ்வாறோ அறிந்து, அவர்கள் இருவரும் தனியே இருந்தால் தீங்கு நேரலாம் எனப்பயந்து, சந்துசெய்வதற்குக் கூடாரத்தினுள்ளே வர முயல்கின்றான். வாயிலைக் காத்திருந்த லுஸிலியஸ் அவனைத் தடுத்தபோதிலும் அவன் கேளாமல், "என்னைக் கொன்றாலன்றிச் சும்மாவிடேன்" எனக் கூடாரத்தினுள் புகுந்துவிடுகின்றான்.

(4) புலவன் தான் சொல்லவந்த செய்தியை, கலிநிலைத்துறைச் செய்யுளடிகள் இரண்டிலமைத்து முடிக்கின்றான். "உங்களைவிட நான் அதிகம் வயதானவன், ஆகையால் நான் சொல்வதைக் கேளுங்கள். நீங்கள் அன்புகொண்டு நண்பராய் வாழ்தலே நலம்"—என்பது இதன் பொருள்.

இதனில், பின்னடியில் வருகின்ற "நிச்ச" என்பதற்கு எதுகையாகும் பொருட்டு, முன்னடியில், "அன்பு" என்றிருக்கவேண்டியதை "அச்பு" என்று விகாரப்படுத்திக் கொண்டுவிட்டான். புன்கவியின் உரிமை யிது. ஷேக்ஸ்பியர் இதனை இங்குப் பரிகாசம் செய்கின்றார். ஸ்ரீமான் T. N. சேஷாசல ஐயர் எழுதியுள்ள, "ஏமாங்கதத்திளவரசன்" என்னும் நாவலில் வருகின்ற சாபாலப் புலவன் திறத்தில் இவ்வேடிக்கையை மிகுதியுங் காணலாம்.

(5) காஸ்ஸியஸும், புலவனுக்குப் பரிந்து பேசுபவன் போல், "அது அவன் மரபு" என்று பரிகசமே செய்கின்றான்.

(6) புலவன் புகுந்து தன் புன்சொல்லைப் பகர்வதற்கு இதுவோ வேளை. வேளைகிடக்க வேளையில் வந்து பிதற்றுமிவனை, அவன் மரபு அது வென்று நான் பொறுத்திருக்கமாட்டேன்—என்பது பொருள்.

(7) நண்பா, என்பது இங்கு நிந்தனையாய்க் கூறப்பட்டது.

(8) மஸ்ஸாலா—ப்ரூட்டஸிற்கும் காஸ்ஸியஸிற்கும் நண்பனான ஒருவன்.

(9) வள்ளம்—பாத்திரம். தான் குடிப்பதற்கு மது (Wine) கொணரும்படி ப்ரூட்டஸ், லூஸியஸை அனுப்புகின்றான்.

(10) ப்ரூட்டஸ் புலவனை வெகுண்டு துரத்தியதைக் குறித்துக் காஸ்ஸியஸ் இதுசொல்கின்றானென்று கொள்ளவேண்டும்.

(11) என்னிடத்தில் வெகுளி தோன்றுகின்றதென்னின், அதற்குக் காரணம் யான்படும் துயர்களின் மிகுதியே—என்கின்றான் ப்ரூட்டஸ்.



காஸ்ஸியஸ்:—நீ அத்துணை வெகுண்டிருக்கக் கூடுமென்று நான் எண்ணியதில்லை (10).

ப்ரூட்டஸ்:—ஓ, காஸ்ஸியஸ், துயரங்கள் பலவற்றால் யான் நொந்திருக்கின்றேன் (11).

காஸ்ஸியஸ்:—தாமே நேர்கின்ற தீமைகளுக்கு நீ இடந்தருவாயாயின்,உன் வைராக்கியத்தை யாதும் பயன்படுத்திக் கொள்ளாதவனாகின்றாய் (12).

ப்ரூட்டஸ்:—துயரத்தை நன்று தாங்குகின்றவன் என்னினும் வேறொருவன் இலன்—போர்ஷியா இறந்துவிட்டாள் (13).

காஸ்ஸியஸ்:—ஹா! போர்ஷியா ?

ப்ரூட்டஸ்:—இறந்துபட்டா ளவள்.

காஸ்ஸியஸ்:— நின்னுட னவ்வளவு இகலியபோது யான் கொலையுண்ணமல் தப்பிய தெங்ஙனம் (14)! ஓ தாங்கற்கரிய இரக்கமுடைய இழவே—எந்த நோயால் ?...(15)

ப்ரூட்டஸ்:—நீடித்த என் பிரிவிற் காற்றாமையும், இள ஆக்டேவியஸும் மார்க்ஆண்டனியும் சேர்ந்து இத்துணை வலிய ராயினரென்ற துயரமும் (16); ஏனெனில், அவள் இறந்ததோடு அந்தச் செய்தியும் வந்தது—இதனால் மனஞ்சிதைந்து வீழ்ந்தனள்; அவள் சிலதியர் அருகிலாமையால் தீயினை விழுங்கினள் (17).

காஸ்ஸியஸ்:—அப்படியோ இறந்தனள் ?

ப்ரூட்டஸ்:—அப்படியுந்தான் !

காஸ்ஸியஸ்:—ஓ! மாயாத் தெய்வங்காள் !

[மதுவும் விளக்குங் கொண்டு லூஸியஸ் வருகின்றான்.]

ப்ரூட்டஸ்:—இனி அவளைப் பற்றி யொன்றும் பேசாதே—மதுவள்ளத்தைக் கொடு—இதனில் யான் எல்லா அபகாரங்களையும் அமிழ்த்தி விடுகின்றேன், காஸ்ஸியஸ் (18). [குடிக்கின்றான்]

காஸ்ஸியஸ்:— அவ்வுறுதிக்கு என் இதயமும் தாகங் கொண்டிருக்கின்றது (19). வள்ளம் வழியவழிய லூஸியஸ், வார்த்துக் கொடு. ப்ரூட்டஸின் அன்பிற்கு நானொருபோதும் அளவிறந்து அருந்துதலியலாது (20). [குடிக்கின்றான்.]

[லூஸியஸ் போகின்றான்.]

(12) வைராக்கியம்—தத்துவ உணர்ச்சியால் உண்டாகும் அமைதி. நாமே சென்று துயரங்களைத் தேடிக்கொள்ளாவிடினும், தீமைகள் சில தாமே எதிர்பாராமல் நம்மை வந்தடைந்துவிடுகின்றன. உன்னைப் போன்ற தத்துவ உணர்ச்சியை உடைய ஒருவன் அவைகளைப் பொறுக்காமல் வெகுள்வானாயின் அவ்வைராக்கியத்தால் அவன்தான் கண்ட பயன் யாது ?—என்பது பொருள்.

(13) தன் வைராக்கியத்தைத் தான் சாலப் பயன்படுத்திக்கொள்கின்றான் என்பதை ப்ரூட்டஸ் எடுத்துக்காட்டுபவனாய்,போர்ஷியா இறந்தாள் என்ற செய்தியைக் கூறி, "இவ்வளவு பெரிய துயரம் என்னைவந்தடைந்தும், நானதற்கு உடையாமல் இன்னும் நிற்கின்ற தன்மையைப் பார்"— எனக் குறிப்புரைக்கின்றான்.

(14) இவ்வளவு பெரிய வருத்தத்தால் மனஞ் சலித்திருந்த நீ, உன்னொடு முரண்பட்டு வாதாடிய என்னைக் கொன்று வீழ்த்தாமல் எவ்வாறு பொறுத்திருந்தாயோ—என்று காஸ்ஸியஸ் வியக்கின்றான்.

(15) எந்த நோயால் போர்ஷியா இறந்தனள்—என்று கேட்கின்றான்.

(16) அவளைக் கொன்றன—என்று வாக்கியம் முடியும்.

(17) தீயினை விழுங்குதல்—விஷத்தைக் குடித்தல்.

(18) இனி அவளைப்பற்றி யொன்றும் சொல்லாதே என்று காஸ்ஸியஸிற்குக் கூறி, லூஸியஸின் கையிலிருந்து மதுவை வாங்கி, "நீ எனக்குச் செய்த அபகாரத்தையும், நான் தாங்கமாட்டாத் துயரடைவேன் என்பதையோ கருதாமல் தன்னுயிரை நீக்கிக்கொண்ட போர்ஷியா எனக்குச் செய்த அபகாரத்தையும், யாவற்றையும், இம்மது அருந்திய மயக்கத்தால் மறந்துபோவேன்" என்று ப்ரூட்டஸ் குடிக்கின்றான்.

(19) நான் செய்த அபகாரத்தை மறப்பதாக நீ கூறிய உறுதியைப் பாராட்டி நானும் என் உறுதிக் கறிகுறியாக உன்னுடன் சேர்ந்து குடிக்க விழைகின்றேன்—என்பது பொருள். ஒன்று சேர்ந்து குடிப்பதால் தம் நட்பின் உறுதியைக் காட்டுவது மேனாட்டார் மரபு.

(20) ப்ரூட்டஸின் அன்பினை அடைந்ததைக் கொண்டாடி நான் எத்துணை எத்துணை குடித்தாலும் அத்துணையும் போதாதென்றே நினைக்கின்றேன்—என்பது பொருள்.

# அப்பர்

## அப்பரும் அறுபத்துநான்கு கலைகளும்—29. தருக்கம்

[684-வது பக்கத் தொடர்ச்சி]

(20) துவேஷம்:—அதாவது வெகுளியால் உண்டாகும் ஒருவகைக் குரோதம்—அது * அனல் வடிவினதாகும். அது அநிஷ்ட சாதன ஞானத்தால் தோன்றுவது. அதுவே துக்கத்திற்கும் அதன் சாதனத்திற்கும் விஷயமாம். அது அறுவகைய தென்பர். அவை யாவன:—

(i) உள்ளே எரியும் வெகுளி:—இதைக் குரோதம் என்ற சிறப்பாயதொரு பேரால் மொழிவதுண்டு. இது, கண் சிவத்தல் முதலியவற்றிற்கு ஏது.

* இழுக்கின் வண்ணங்க ளாகிய வெவ்வழல்
குழைக்கும் வண்ணங்க ளாகியுங் கூடியும்
மழைக்கண் மாமுகி லாகிய வண்ணமும்
அழைக்கும் வண்ணமு மாவரை யாறரே.
திருவையாறு - திருக்குறுந்தொகை 6.

"வெகுண்டோன் அவிநயம் விளம்புங் காலை
மடித்த வாயும் மலர்ந்த மார்புந்
துடித்த புருவமுஞ் சுட்டிய விரலும்
கன்றின உள்ளமொடு கைபுடைத் திடுதலும்
அன்ன நோக்கமோ டாய்ந்தனர் கொளலே"

இராவணன் கைலாய மலையை யெடுத்தபோது எவ்வகைக் குணமுடையோனா யிருந்தானோ அத்தன்மையதாம் இவ்வெகுளி. அதை அப்பர் பல பதிகங்களில் மிகவும் அழகாய் விளக்குகின்றார்.

கறுக்கொண் டரக்கன் கயிலையைப்
  பற்றிய கையுமெய்யும்
நெறுக்கென் றிறச்செற்ற சேவடி
  யாற்கூற்றை நீறு செய்தீர்

199150

வெறிக்கொன்றை மாலை முடியீர்
விரிநீர் மிழலையுள்ளீர்
இறக்கின்று நும்மை மறக்கினு
மென்னைக் குறிக்கொண்மினே
திருவீழிமிழலை-திருவிருத்தம் 10.

(ii) ஈரிஷை:—பிறன் உடைமையானதொரு பொருளை அன்னோன் அடைதலில் உண்டாகும் கோபங் கலந்த துன்பம்.

வன்கண்ணர் வாளரக்கர்
வாழ்வினை யொன்றறியார்
புன்கண்ண ராகிநின்று
போர்கள்செய் தாரைமாட்டிச்
செங்கண்மால் செய்தகோயில்
திருவிரா மேச்சுரத்தைத்
தங்கணு லெய்தவல்லார்
தாழ்வராத் தலைவன்பாலே.
திருவிராமேச்சுரம் - திருநேரிசை 10.

(iii) அசூயை:-பிறரது வித்தை முதலியனவற்றைக் கண்டு உண்டாகும் பொறாமை. இது சிவனடியாரை வழிபடுவோரிடம் பொருந்தாது:—

அண்டர் வாழ்வு மமர ரிருக்கையும்
கண்டு வீற்றிருக் குங்கருத் தொன்றிலோம்
வண்டு சேர்மயி லாடு துறையரன்
தொண்டர் பாதங்கள் சூடித் துதையிலே.
குறைவி லோங்கோடு மாநுட வாழ்க்கையால்
கறைநி லாவிய கண்டனெண் தோளினன்
மறைவ லான்மயி லாடு துறையுறை
இறைவ னீள்கழ லேத்தி யிருக்கிலே.
திருமயிலாடுதுறை - திருக்குறுந்தொகை. 35.

(iv) துரோகம்:—பிறரைக் கெடுத்தற் பொருட்டு உண்டாவது. இதைக் "கரவாடும் வன்னெஞ்சம்" என்பார் அப்பர்.

கரவாடும் வன்னெஞ்சர்க் கரியானைக் காவார்பால்
விரவாடும் பெருமானை விடையேறும் வித்தகனை
அரவாடச் சடைதாழ அங்கையினி லனலேந்தி
இரவாடும் பெருமானை யென்மனத்தே வைத்தேனே.
திருக்கச்சியே கம்பம் - பண் - காந்தாரம் 1.

மற்றும்,

நெஞ்சினைத் தூய்மை செய்து
நினைக்குமா நினைப்பி யாதே
வஞ்சமே செய்தி யாலோ
வானவர் தலைவ னேநீ
மஞ்சடை சோலைத் தில்லை
மல்குசிற் றம்ப லத்தே
அஞ்சொலாள் காண நின்று
அழகனீ யாடு மாறே.
கோயில் திருநேரிசை - பண் - கொல்லி 9.

என்பதையுங் காண்க.

(v) அமர்ஷம்:—குற்றம் செய்வோனிடத்து, அதனைத் தடுக்கும் ஆற்றலில்லாத மனிதனுக்கு உண்டாவது. (உ-ம்) சிவபெருமானிடம் தாருகவனத்து இருடிகளுக் குண்டான துவேஷம்.

(vi) அபிமானம்:—அபகாரஞ்செய்தவனுக்குத் துன்பம் செய்யச் சாமர்த்தியம் சிறிது மில்லாத ஒருவனுக்குத் தனது ஆத்மாவிடத்தி லுண்டாகும் துவேஷம்.

இவையாவும் மனிதர் சிலராய் வாழ்வதற்கு ஏற்படுகின்ற தடைகளாம்.

ஞாலமு மறிய வேண்டில் நன்றென வாழ லுற்றீர்
காலமுங் கழிய லான கள்ளத்தை ஒழிய கில்லீர் [கில்
கோலமும் வேண்டா ஆர்வச் செற்றங்கள் குரோத நீங்
சீலமும் நோன்புமாவர் திருச்செம்பொன் பள்ளியாரே
—திருச்செம்பொன்பள்ளி - திருநேரிசை - 6.

(21) பிரயத்தனம்:—அதாவது முயற்சி. இதற்கு அடிப்படையாய் நிற்பது உற்சாகமாகும். "தெய்வத்தாலாகா தெனினு முயற்சி மெய்வருந்தக் கூலிதரும்" என்றார் திருவள்ளுவர். (உ-ம்)

பாசத்தைப் பற்றறுக்க லாகு நெஞ்சே
பரஞ்சோதி பண்டரங்கா பாவ நாசா!
தேசத் தொளிவிளக்கே தேவ தேவே!
திருவாரூர் திருமூலட் டானு வென்றும்
நேசத்தை நீபெருக்கி நேர்நின் றுள்கி
நித்தலுஞ்சென் றடிமேல் வீழ்ந்து நின்று
ஏசற்று நின்றிமையோ ரேறே யென்றும்
எம்பெருமா னென்றென்றே யேத்தா நில்லே.
திருவாரூர் - திருத்தாண்டகம் 6.

பிரயத்தனம் மூன்றுவகை யாகுமெனத் தர்க்கநூல் கூறும். அவையாவன (i) பிரவிருத்தி, அல்லது இச்சையால் தோன்று முயற்சி (இதன் கண்டனையை அப்பர் திருநெய்த்தானம்—திருத்தாண்டக முற்றும் காணலாம்) (ii) நிவிர்த்தி—அநிச்சையாற் றோன்று முயற்சி(இதை "இடர் கெடுமா றெண்ணுதியேல்" என்னும் திருவாரூர்—திருத்தாண்டகத்திற் காண்க). (iii) ஜீவன யோனி — அதாவது ஆங்கிலத்தில் Instinct and heridity என்றுகூறப்படும். முன்னோர் தேகதத்துவத்தால் ஏற்பட்டு, யந்திரம்போல் அறிவு செலுத்தாமலே செல்லும்(Reflect actions) முயற்சி யொழுக்கம். "நற்றவா வுனை நான்மறக்கினும் சொல்லு நாநமச்சிவாயவே" என்பது இதற்கோர் உதாரணமாகும்.

(22) தருமம் (23) அதருமம்:—

இவற்றுள் அறம் என்பது தருமத்தை உணர்த்தும். அதாவது செய்யவேண்டிய கடமையைச் செய்தல். இச்சொற்றொடரின் வன்மையைக் கீழ்வரும் அப்பர் பாசுரத்தா லறியலாம்.

அறந்தெரியா ஊத்தைவாய் அறிவில் சிந்தை
ஆரம்பக் குண்டரோ டயர்த்து நாளும்
மறந்துமரன் திருவடிகள் நினைய மாட்டா
மதியிலியேன் வாழ்வெல்லாம் வாளா மண்மேற்
பிறந்தநாள் நாளல்ல வாளா ஈசன்
பேர்பிதற்றிச் சீரடிமைத் திறத்து ளன்பு
செறிந்தெறிம்பி யூர்மலைமேல் மாணிக் கத்தைச்
செழுஞ்சுடரைச்சென் றடையப் பெற்றேனே.
திருவெறும்பியூர்-திருத்தாண்டகம் 8.

ஒரு நிலையில் தருமமாகக் காணப்படுவதொன்று மற்றொரு நிலையில் அதருமமாகும். சண்டீஸ்வரர் தன் தாதைதாளைமழுவாலெறிந்ததுபாதகமாயினும், அந்த அறமாகவே சிவபெருமான் கொண்டது திருமுறைகளால் புகழப்பட்ட செய்கையாம் :—

தாதையைத் தாளற வீசிய சண்டிக்கிவ்
வண்டத் தொடுமுடனே
பூதலத் தோரும் வணங்கப் பொற்கோயிலும்
போனக மும்மருளிச்



சோதி மணிமுடித் தாமமும் நாமமும்
தொண்டர்க்கு நாயகமும்
பாதகத் துக்கே பரிசுவைத் தானுக்குப்
பல்லாண்டு கூறுதுமே.
சேந்தனார்-திருப்பல்லாண்டு 10.

(24) சமஸ்காரம்:—

இது வேகம், பாவனை, திதித்தாபம் என மூவகை. அவற்றுள் (i) வேகம் - பிருதிவி முதல் நான்கினும் மனத்தினும் இருப்பது. இது வினைக்கு ஏது. ஒன்றனது முதற்கிரியையினுற்றோன்றி, இரண்டாவது மூன்றாவது முதலிய கிரியைகளைத் தோற்றுவிப்பதாகும்.

குசையு மங்கையிற் கோசமுங் கொண்டவவ்
வசையில் மங்கல வாசகர் வாழ்த்தவே
இசைய மங்கையுந் தானுமொன் றாயினான்
விசைய மங்கையுள் வேதியன் காண்மினே.
திருவிசயமங்கை - திருக்குறுந்தொகை 1.

(ii) பாவனை:—இது ஆன்மாவின்கணிருப்பது. அனுபவத்தாற் றோன்றியது. நினைவுக்கு ஏது. அது துணையுடனே எழுந்து நினைவைத் தோற்றுவிக்கும். எனவே, முன்னனுபவத்தாற் றோன்றி நினைவிற்குக் காரணமாய் ஜீவான்மாவி லிருப்பது பாவனை யென்னும் சமஸ்காரம். ஒப்புமைக்காட்சி முதலிய சககாரிகளொன்றால் நினைவுண்டாதற் கேது—"பாவனையாய கருத்தினில் வந்த பரா அமுதாகாதே" என்னும் மணிவாசகர் கூற்று நோக்குக. மற்றும் அப்பரும்

உன்னி வானவ ரோதிய சிந்தையில்
கன்னல் தேன்கட லூரின் மயானத்தார்
தன்னை நோக்கித் தொழுதெழு வார்க்கெலாம்
பின்னை யென்னார் பெருமா னடிகளே."
திருக்கடவூர் மயானம் - திருக்குறுந்தொகை 1.

(iii) திதித்தாபம்:—இது பரிசமுள்ள திரவியங்களுள் ஒன்றன்கணிருப்பது. தனக்குஆசிரயமான பழய நிலைமையை அடையச் செய்யும் குணம். நாய்வாலை நீட்டினால் அது மறுபடியும் வளையும். வளைந்த வில்லை நாணினின்று கழற்றினால் நிமிரும். இக்குணங்களைத் திதித்தாபக மென்று தர்க்கபாஷையில் மொழிவர். இக்குணத்தால், சுருக்கம் பெருக்கம் முதலியன ஏற்படும்:—

சுருக்கமொடு பெருக்கநிலை நித்தல் பற்றித்
துப்பறை யென் றனைவீரிவ் வுலகை யோடிச்
செருக்கிமிகை செலுத்தியும் செய்கை வைகல்
செய்கின்றீர்க் கமையாதே யானேன் மிக்க
தருக்கிமிக வரையெடுத்த அரக்க னாகம்
தளரவடி யெடுத்தவன்றன் பாடல் கேட்டு
இரக்கமெழுந் தருளியவெம் பெருமான் பாதத்
திடையிலேன் கெடுவீர்கா ளிடறேன் மின்னே
—திருவாரூர் - திருத்தாண்டகம்.

என்னும் அப்பர் பாசுரம் காண்க.

பாவனை யென்னும் சமஸ்காரமும், புத்தி முதல் தர்மாதர்மம் ஈறான ஒன்பது குணங்களும் ஆன்மாவின் விசேட குணங்கள் என்பர்.

குணங்களைப் பொது அல்லது சாமாநிய குணங்களென்றும் சிறப்பு அல்லது விசேட குணங்களென்றும் பகுப்பார். சாமாநிய குணங்கள்—சங்கியை, பரிமாணம், பிரதக்த்துவம், சையோகம், விபாகம், பரத்துவம், அபரத்துவம், குருத்துவம் நைமித்திகத் திரவத்துவம், வேகம், திதித்தாபகம் என்பன. விசேட குணங்களாவன—ரூபம், ரசம், கந்தம், பரிசம், சிநேகம், சத்தம், புத்தி, சுகம், துக்கம், இராகம், துவேஷம், பிரயத்தம், தருமம், அதருமம், பாவனை என்பன.

இப் பாகுபாடுகளன்றி, குணங்களுக்கு வேறு பாகுபாடுகள் கூறுவாருமுளர். அவையாவன—மூர்த்த குணங்கள் அமூர்த்த குணங்கள். உருவம், இரசம், கந்தம், பரிசம், பரத்துவம், பரத்துவம், திரவத்துவம், குருத்துவம், சிநேகம், வேகம் என்பன மூர்த்த குணங்கள். தர்மம், அதர்மம், பாவனை, சத்தம், புத்தி, சுகம், துக்கம், ராகம், துவேஷம், பிரயத்நமென்பன அமூர்த்த குணங்கள். சங்கியை, பரிமாணம், வேற்றுமை, சையோகம், விபாகம், என்பன மூர்த்தா மூர்த்த குணங்கள். இன்னும் பற்பல விதங்களிலும் குணங்களைப் பிரிப்பார். அவைகளை வந்துழிக் காண்க.

# பொதிகை நிகண்டு

[693-வது பக்கத் தொடர்ச்சி]

மலையாகுங் குடமலைவல் லியங்கொல்லிக் கிரியாம்
வட்டவரை யுவளகஞ்சக் கரவான கிரியா
மொலியல்வரு புனறடினி குடிஞைதுனி யோண
மூக்திதுறை சிந்துநதி யாற்றின்பே ருயவை
கலுழிகான் யாற்றின்பே ருவகையரு வியின்பேர்
காகந்தி பொன்னிகா வேரிகா விரிப்பேர்
சலமிகுதக் கணகங்கை கடனதிதண் பொருனை
தண்பொருந்தக் தாம்பிரபன் னியும்பெரியா றெனுமே.

ஆற்றினிற்கோ தாவிரிப்பேர் விருத்தகங்கை வைகை
யாற்றின்பேர் வேகவதி கவுதமைப்பேர் கோதை
மாற்றுகன்னிப் பேர்குமரி*யோடைகால் கால்வாய்
† வாய்க்காலின் பேர்குரம்பு குலைசேது வரம்பு
‡தேற்றுமணை செய்கரைப்பேர் கோலநீர்க் கொழுந்தாக்
தெளிந்தநீர் சலசலமா மூக்திநீர்ச் சுழியா
மூற்றின்பே ருறவியாங் கூவலே§கூவ
மொடுபூவ லசும்புகிண றுமெனச்சொல் வாரே. 205.

வாரியரி நேமிநதி பதிபவ்வங் குரவை
வாருணஞ்ச லேந்திரியன் னவமளக்கர் கார்கோள்
நீருவரி சலநிதிநீ கரந்தநீ ரலைமுன்
னீர்தரங்கி திரையுததி புவர்வேலா வலயம்
வீரைமக ராலயமம் பரமத்தி யோதம்
வெள்ளம்பா ராவாரம் வேலையே சலதி
பாருடைசக் கரம்புணரி கடலம்பு ராசி
பரவையுப்புச் சலராசி யாழிசா கரமே. 206.

கரைகரலை யார்கலிவா ரணஞ்சிந்து பெருநீர்
கழிச்சிரத்தி னுகரம்வா ருதிசலவட் டமுமென்
றுரைதருமைம் பதுபேருஞ் சமுத்திரத்துக் காகு
மோரமலை வாய்தீரந் தடம்வாரந் திமிரி

* டாகுங்கால் (பி-ம்)
† வாய்க்காலோடைய தாஞ்சேதணைகுரம்புவரம்பு (பிம்)
‡ தேற்றுகுலை (பி-ம்)
§ கூப (பி-ம்)

வரையணைகூ லங்கோடு பாரநீர்க் கரைப்பேர்
வளர்வேலை பாரியம்பா ராவாரங் குவடும்
விரைகடலின் கரையாங்கல் லோலமலை தரங்கம்
விசிகரஞ்சீ கரங்குமிழி நீரறலுந் திரையே. 207.
திருகுபுவ்வம் புற்புதமா குசமொக்குள் கொப்பூழ்
*செறிபுரையுங் குமிழியின்பேர் நுரைபேன மாகும்
குரைகலங்க னீர்கலுழி யாவிலமாங் கூவம்
†கும்பீரங் கயந்தொடுகுண் டமூந்தகழ காத
நிரலுறுமா ழுமுநீந்து புனலாம்வ ளாறு
நிறைநீர்பி ராறுமதா முவர்நீர்ப்பே ருறையா
மிருணமழ னிலமுமுவர்த் தலமாகுங் காய
விடுங்கானன் முரம்பென்னு மிம்மூன்றுங் கழியே.208.
கழிமுகந்தோ ணுமுகம தோமுகமே போந்து
‡கயவுரி புகாருமழி முகமுமென§வேழா
மழிவிலுவ ளகமளக்கர் கழிநிலமுப் பளமா
மரங்கமாற் றிடைக்குறையா மிலங்கைதுருத் தியுமாம்
குழையளக்க ரசறுதொய்யில் செதும்பளறு சகதி
குழம்பசும்பங் கணம்பொருட்டுக் கொள்ளல்பங்கம்பூழி
*யளறுதெளி மயசுசெய்யல் வரிதோணி காலா
ழுஞறுமசு பாகமள்ளல் சேதகமுஞ் சேறே. 209.
சேறதனிற் குமிழ்பொருட்டாம் வெண்மணல்வா லுகமாந்
தீயகரு மணலறலா மதரயிரி மணலாம்
பாறில்புளி னந்துதி மணற்குன்றூந் தரிசு
பாழகிராம் பின்பேர்புற் றரைசாட்டு வலமா
மூறிலஞ்சி பொய்கைவன தரம்வட்ட மெல்லை
யுவளகங்கோட் டகந்தங்கல் கயம்பயந் தடாகங்
கூறுசுனை குழிபல்வ லங்கிடங்கு மலங்கல்
குண்டமூ ருணிபண்ணை யேரிபங்கம் படுவே. 210.
படுகர்குளஞ் சலந்தரநீர் நிலைகளினி யோடை
பட்டமிலஞ் சகமாவி யலந்தைகுட்டங் கேணி
மடுவொடுபுட் கரணிதடம் பூவிமுப்பா னெட்டும்
வாவியின்பே ரிந்திரவா விகளிலவந் திகையாந்
தடிபுலஞ்செய் மாக்கழனி பணையால வாலந்
தாழ்பழனம் பானல்செறுக் கைதைபண்ணை யகணி
கொடிவரப்புள் வயல்கண்டம் விளைநிலப்பேர் புன்செய்
குண்டில்பாத்தியுமிவைமுப் பேர்சிறுசெய் யாமே. 211.
செய்வரம்பு மாசிபரம் பொடுகுரம்பாம் வரம்பிற்
சேரருகு கங்கெனவா முழவின்பேர் துடவை
தொய்யிலுமாஞ் சாலேயஞ் செந்நெல்விளை நிலமாந்
துதிக்குமுரு வரையென்ப †பலவிளையு நிலமா
மொய்கடவு துடவைகொல்லை படப்பையுந்தோட்டப்பேர்
முதையல்பழங் கொல்லையின்பேர் புதியகொல்லை
யிதையாம்
பொய்யுறுவன் மீகயலை புற்றுருகுங் குரும்பு
புற்றஞ்சோ ருந்துச்சி லொதுக்கிடப்பே ரளவே. 212.
அளவுதருஞ் சாந்தமொரு வந்தம்வே றிடமா
மரங்கமா யுதங்கூத்துச் சூதுபயில் களமாம்
வளர்கழகங் களங்கிடைகல் லூரியென நான்கு
மகிழ்கல்வி பயிலிடப்பே ரமர்க்களம்போர்க் களமே
களரிபொருங் களம்யுத்த களமிரண களஞ்செங்
களங்கடவை படுகளமா கவபூமி மடவை
தளருமடு களமிறக்கை செருக்களஞ்செம் புலமே
தடவைபறந் தலையொடுஞாட் பகஞ்சமர்செயிடமே.213.

இடுகாடு சுடுகாடு காளவனஞ் சுடலை
யெரிவனந்துற் காடுபிண வரைபுறங்கா டிமம்
படுகாடு பிதிர்வனமே சுடுநில மயானம்
பன்னிரண்டாங் குயிலாயங் குடம்பைகட்சி கூண்டு
தடுகூடு பஞ்சரமு†மாம்பள்ளி பாயல்
சட்டகங்கண் படைபடுக்கை யமளிபள்ளி சேக்கை
விடுசயன முறையுள்கட்சி துயிலிடமாம் பொத்து
மென்பண்ணை சேக்கைபட்டம் விலங்குதுயி லிடமே.

துயிலிடம்வெம் பரிகரிக்குக் கண்டஞ்சே வகமாந்
தொழுவேயா னிலைபசுவின் புரையாகு மருப்ப
முயருமா ரிடமழுவ மழுக்கிடமா ளென்ளல்
உவளகங்குப் புறல்பயம்பு தாழ்வுகுழி படுகர்
பயலிழிவு கிழக்கவல்கீழ் பள்ளமதாங் கோழிப்
பறவையிடங் கிரவுஞ்சம் யோசனைப்பேர் புகையாம்
குயிலுஞ்சா மார்த்தங்கா வதங்காத மாகுங்
கூப்பிடுதூ ரப்பேர் குரோசமென வருமே. 215.

வரியிடவை யடிசெப்பங் கிறியியவை வாரி
‡வகுந்தொழுக்க நடைதாரி வதிசெலவு பாதை
சரிகட்டு வயவைநெறி யதரிகுவை பயணந்
தாரையத்தங் கால்பதவை யாறுவங்கி ரயனந்
தெருநடவை பதமாற்கஞ் சுரம்வட்டை பட்டஞ்
சேர்வழிப்பே ரேழைந்தா மருநெறிப்பேர் தூம்பு
சுரமத்தங் கடங்கடறுங் கவலைகவர் வழியாஞ்
சுருங்கைசோ பானமா ரோகணங்கற் படியே. 216.

படியளக்கர் பெருவழியாம் விடங்கர்சிறு வழியாம்
பணைவரம்பின் வழிப்பேர் மரீசியாம் வழிபா
லிடைவயின்கண் குலமுதலுட் பதியகந்தேம் பக்கம்
இடன்களஞ்சார்§கடை முனைமேல் வாமங்கீழ் சூழல்
புடைவலம்பின் பாடுபட்டி வாய்வைப்புத் தேயம்
புறமருங்கு நிலந்தான முழிதலையிற் பாங்கர்
கடைமுகம் வளாகமய லுறைதெவ்வு முன்கால்
கைபுலநாற் பானேழு மிடப்பெயரின் பாலே. 217

பால்புடை*பாரிச மருங்குபுறஞ் சார்வு
பாங்கர்சிறை ஞாங்கருழி யாங்கர்பக்க மாகும்
சால்பிரமங் கூழைநனந் தலையொத்த லணுநாச்
சமன்மைய மாதனமத் திமநள்ளு நாப்பண்
எலிடையு நடுவாகு வீண்டிவணே யிம்பர்
இவ்விடப்பே ராண்டவணவ் விடமும்ப ருவணு
மேலுடனஞ் ஞாங்கர்தலை யன்னர்முன்றூண் முதலாம்
வினவுமெங்கி யாங்கெவண்யாண் டெவ்விடமத்
தனையே. 218.

* செறியுரையுங் (பி-ம்)
† கொம்பீரங் கயத்தொடு (பி-ம்)
‡ கயவரி (பி-ம்)
§ வாரு (பி-ம்)
* யளறுகெளி (பி-ம்)
† தலவிளையு (பி-ம்)

† மாம்பாழி (பி-ம்)
‡ வகுர்தொழுக்கு (பி-ம)
§ புழைதிணைமேல் (பி-ம்)
* பாரிசம் பாங்கு புறஞ்சார்பு மாடு (பி-ம்)

ஐந்தாவது இடப்பெயர் முற்றும்.

அறிக்கை:—கலாநிலயத்தில் மதிப்புரை வரைவதற்குப் புத்தகம் அனுப்புவார் ரூ. 10 கட்டணம் செலுத்த வேண்டும். அப்பொழுதே புத்தகத்தின் குணங்களையுங் குற்றங்களையும் ஆய்ந்து எழுதுவோம். இல்லையேல் புத்தகத்தின் வரவுமாத்திரம் குறிக்கப்படும்



# கம்பராமாயணம்

## ஆரணிய காண்டம்—6. கரன் வதைப் படலம்.

[636-வது பக்கத் தொடர்ச்சி]

பின்னடி வைப்பரோ பெரிய வீரரே.

மோதமர் புரிய வந்த வெஞ்சினத்துக் கரனுடனே வீரவாதஞ் செய்து இராகவன் அவனைக் கொன்றொழித்த கதையினை வான்மீகி முனிவர் பின்வருமாறு கூறுகின்றார்:—

இராமர் அக் கதையைப் பாணங்களால் துண்டித்து, தாம் எப்பொழுதும் தருமத்தில் வாஞ்சை யுள்ளவராகையால் கொஞ்சம் புன்னகையுடன் கரனைப்பார்த்துக் கோபமாகக் கூறினர்:—"ராக்ஷசப்பதரே, நீ உனது பலம் முழுமையையும் காண்பித்தது இதுதான்! என் கையால் சக்தியற்று என் வீணுகக் குமிறுகிறாய்? உனது கதை என் பாணங்களால் பிளக்கப்பட்டு அதோ பூமியில் விழுந்திருக்கிறது! வீண்பெருமை பாராட்டிக்கொண்ட உனது செருக்குக் காரணமாகவிருந்த கதையின்கதி இப்படியாக முடிந்தது! மாண்டுவிட்ட அரக்கர் பந்துக்கள் துக்கக்கண்ணீரைத் துடைப்பதாக நீ சொன்ன சொல்லும் பொய்யாக முடிந்தது. நீசனுகவும், கொடிய செய்கையுள்ளவனுகவும், பொய்மையே பொருந்தியவனுகவும் இருக்கும் உனது உயிரை, கருடன் அமிர்த்தத்தைக் கவர்ந்ததுபோல, நான் கவர்ந்துவிடுகிறேன். இன்று உனது கழுத்து எனது பாணங்களால் அறுக்கப்பட்டுக் கீழேவிழ, உடலிலிருந்து கொப்புளித்துப் பெருகும் இரத்தத்தை இப்பூமி குடிக்கட்டும். இன்று உனது தேகம் புழுதியாடி, கைகளும் வெட்டுண்டு, இஷ்டமில்லாத பெண்போல நீ பூமியைத் தழுவிக்கொண்டு தூங்கலாம். நீ அவ்வாறு கண்விழியாத் தூக்கம் தூங்கிவிட்டபின்பு, இத்தண்டகாரணியம் ஒதுக்கிடந் தேடி வருபவர்களுக்கு உறைவிடமாய் இருக்கும். எனது பாணங்களால் ஜனஸ்தானத்தில் இருக்கும் இராக்ஷசர்கள் எல்லாரும் தொலைந்த பிறகு இவ்விடத்தில் ரிஷிகள் பயமின்றிச் சஞ்சரிப்பார்கள். மற்றவர்களுக்குப் பயத்தை உண்டாக்கிக்கொண்டு இக்காட்டில் சஞ்சரித்து வந்த அரக்கியர்கள், தங்கள் பந்துக்கள் நாசமடைந்த காரணத்தால் முகம்வாடி, பயந்து, கண்ணுங் கண்ணீருமாக வேறிடங்களுக்கு இன்று ஓடிவிடுவார்கள். உங்கள் குலத்துக்கு ஒத்த குலத்தில் வந்த உங்களுடைய மனைவியர்கள், இன்று சோகம் இத்தன்மையது என்பதை அறிந்து, தங்கள் பொருள்கள் முழுவதும் இழந்துவிடுவார்கள். கொடியவனே, அற்பனே, பிராமணகண்டகனே, உனக்காகவல்லவா தினந்தோறும் முநிவர்கள் நடுங்கி ஊக்கமிழந்து நெடுநாளாக அவிசை ஓமத்தீயில் ஓமம் செய்கிறார்கள்?"

இவ்விதமாகப் போர்க்களத்தில் இராமர், கோபத்தால் சொன்ன சொல்லைக்கேட்டுக் கரன் கடுகடுத்துச் சொல்லலுற்றான்:—"நீ வெகு செருக்கடைந்திருக்கிறாய்; பயமென்பது உன்னைப்பற்றி யிருக்கவும் பயமற்றுப் பேசுகிறாய். மரணம் கிட்டிவிட்டபடியால் இன்னது சொல்லலாம் இன்னது சொல்லக் கூடாதென்பதைக்கூட நீ அறியவில்லை. அதுவும் நியாயந்தான்; ஏனெனில், காலபாசத்தால் கட்டப்பட்டவர்கள் புலன்களை இழந்து விடுகிறபடியால். செய்யத் தக்கது இது செய்யத் தகாதது இது என்று பகுத்தறிய மாட்டார்கள்." இராமரைப் பார்த்து இவ்வாறு சொல்லிக்கொண்டே புருவங்களை நெரித்துக் கரன் சுற்றிலும் பார்த்துப் பக்கத்தில் ஆச்சாமரமொன்று நிற்பதைக் கண்டான். போர்க்களத்தில் ஆயுதத்திற்காகச் சுற்றிப் பார்ப்பவன் கீழுதட்டைச் கடித்துக்கொண்டு அதைப் பிடுங்கிக் கைகளால் உயரத்தூக்கி வெகு பலமாக ஒரு கூச்சல் போட்டு "நீ இத்துடன் மாண்டாய்" என்று சொல்லி இராமர்மேல் வீசியெறிந்தான். வெகு பராக்கிரமம் பொருந்திய இராமர் அவ்வாறு தம்மை நோக்கிவரும் அம்மரத்தைத் தமது பாணங்களால் துண்டித்து இனிச் சீக்கிரம் போரில் கரனைக் கொன்றுவிட வேண்டுமென்று கோபங்கொண்டார். அந்தக் கோபத்தால் இராமர் தேகம் வெயர்த்துக் கண்கள் சிவந்து ஆயிரம் பாணங்களைக் கரன்மேல் செலுத்தினர். அப்பாணங்கள் தைத்தவிடங்களிலிருந்து இரத்தம் குமிழியிட்டுப் பொங்கி, மலையின் பக்கங்களிலிருந்து அருவிகள் பெருகி ஓடுவதுபோல, ஓடிற்று. இராமர் எய்த பாணங்களினுல் கரன் சோர்ந்து, இரத்தத்தின் நாற்றத்தால் புத்திமயங்கி, அவரிருந்த இடத்தை நோக்கி வேகமாக ஓடிவந்தான். தேகம் முழுமையும் இவ்வாறு இரத்தம்வழியத் தம்மை நோக்கி ஓடிவரும் கரனைக் கண்டு ஆயுதபாணியாகிய இராமர் திடீரென்று இரண்டடி பின்வாங்கினர். பிறகு கரனை வதைசெய்வதற்காக, அக்கினிக்கொப்பாய், மற்றொரு பிரமதண்டம்போல விளங்கும் பாணமொன்றைக் கையிலெடுத்தார். அது புத்திமானுகிய தேவேந்திரனுல் கொடுக்கப்பட்ட பாணம். அப்பாணம் இராமருடைய வில்லிலிருந்து விடுக்கப்பட்டு, இடிபோல முழங்கிக்கொண்டு, கரன்மார்பில் பாய்ந்தது. கரன், திருவெண்காட்டில் ருத்திரனுல் தஹிக்கப்பட்டு அந்தகாசுரன் மாய்ந்ததுபோல, இராமருடைய சராக்கினியால் தஹிக்கப்பட்டுப் பூமியில் விழுந்தான். வச்சிராயுதத்தால் விருத்திராசுரன் மாண்டதுபோலவும், நுரையால் நமுசி மாண்டதுபோலவும், இடியால் வாலாசுரன்மாண்டது போலவும், கரன் இராமபாணத்தால் மாண்டுவிழுந்தான்.

பிறகு ராஜரிஷிகளும் மற்ற ரிஷிகளும் சேர்ந்து இராமரைக் கண்டு களித்து "இதன் பொருட்டே பாகசாசனுகிய மகேந்திரன் சரபங்கருடைய புண்ணிய ஆச்சிரமத்துக்கு வந்தான். கொடிய செயல் புரியும் இவ்விராக்ஷசர்களை வதைக்கும் பொருட்டே மகரிஷிகளும் தங்களை அனேக உபாயங்களால் இக்காட்டுக்குக் கொண்டுவந்தார்கள். நாங்கள் உத்தேசித்த காரியம் முடிந்துவிட்டது. மகரிஷிகள் இனிப் பயமின்றித் தவம்புரிவார்கள்" என்று சொன்னர்கள். இதற்குள் தேவர்களும் சாரணர்களும் வியப்படைந்து ஆகாசத்தில் தோன்றித் துந்துபி முழக்கி, வெகு சந்தோஷ முற்று இராமர்மேல் புஷ்பமாரி பொழிந்தார்கள். "ஒன்றரை முகூர்த்தத்தில் இராமர் தமது கூர்மையான அம்புகளால் பயங்கரமான தொழில்கள் புரிந்து வந்த கரன் தூஷணன் முதலிய அரக்கர்கள் பதினாலாயிரம் பெயர்களையும் போரில் வதைத்தார். ஆகா! எவ்வளவு பெருங்காரியம் இராமர் செய்தார்! என்ன சாமர்த்தியம்! என்ன பராக்கிரமம்! இது விஷ்ணுவின் பராக்கிரமம் போலல்லவா காண்கிறது" என்று இவ்விதமாகச் சொல்லிக்கொண்டு தேவதைகள் தங்கள் தங்கள் இருப்பிடம் சென்றார்கள்.

அச்சமயத்தில் வீரராகிய லக்ஷ்மணர் சீதையுடன் மலைக்குகையைவிட்டு வந்து சந்தோஷமாக ஆச்சிரமத்துள் புகுந்தார். வெற்றிபெற்ற இராமரும், மகரிஷிகள் ஆராதிக்க, லக்ஷ்மணர் பூஜிக்க, ஆச்சிரமம் சேர்ந்தார். சத்துருக்களைக் கொன்று, பெரிய ரிஷிகளுக்கெல்லாம் சுகத்தை உண்டுபண்ணின தனது கணவரான இராமரைச் சீதை கண்டு களிகூர்ந்து ஆசுந்தத்தால் தழுவினள். ராக்ஷசக்கூட்டங்கள் மாண்டதையும் இராமர் காயமின்றி இருந்ததையும்

சீதை பார்த்துச் சந்தோஷமடைந்து ஆனந்தக்கடலில் மூழ்கினள். பிறகு சந்தோஷமடைந்த மகரிஷிகளால் பூஜிக்கப்பட்ட பகைவரேறாகிய தனது கணவனை ஜானகி மறுபடியும் தழுவிக் களித்தமுகத்தோடு பேருவகையுற்றாள்.

இவ்வண்ணம் வான்மீகியின் வாய்நின்று யாவுங்கேட்டபின் கம்பரது நூலினுள் மீண்டுங் கருத்தைச்செலுத்துமிடத்து, வீழ்ந்தொழிந்த வெந்திறலரக்கர் திறத்தில் நமதெண்ணம் மாறுவதில்லையாயினும் அவர்களை வீழ்த்திய வகையினில் இவ்விரு இராமர்களும் வேறு வேறாய்த் தோன்றுகின்றனர். ஓங்கி எறியும் அரக்கர் தம் அம்புகளுக்கெல்லாம் அடிபடும் இடமாகி இராமன் புண்பட்ட உடலுடன் குருதிகொப்புளிக்கப் போர்க்களம் நின்ற காட்சியை வான்மீகத்தின்படி இராமனிற் காண்கின்றோம். இறப்பிலி யாதலால் இராமன் இருந்திருந்து இறுதியில் அரக்கரைக் கொன்று தீர்க்கக்கூடியதாயிற்று என்னும் முடிவிற்கு வான்மீகி கொண்டுவருகின்றார். திரிசிரன் எய்த மூன்று பாணங்கள் தைத்த முகத்துடன் இராமன், "உன்னுடைய பாணங்கள் என் நெற்றியில் புஷ்பங்கள் பண்ணுங் காயத்தைப் பண்ணிவிட்டன", என்னும் இவ்வீரவாதம், "நான் சாகவல்லேனேல் நீயும் என்னைக் கொல்ல வல்லை" என்ற வோர் உட்பொருளை ஏற்றுக் கொள்கின்றது. இந்த வோர் நிலைமையையே நாம் இராமனது செய்கை யொவ்வொன்றிலும் வார்த்தை யொவ்வொன்றிலுங் காணலாம். அவ்வண்ணமே, கரனுடன் இராமன் கழறியனவெல்லாந் தன் கைத்திறத்தைக் கூறுவதனினும் தன் உயிரின் உறுதியையே உறஉறச் சொல்லும் வகையில் சேர்ந்து விடுகின்றன. ஆயினும், கனற்றிய கடுங்கோபமுடன் கரன் தன் மீது பாய்ந்து வரும்போது, இராமன் தன் உயிரின் உறுதியைச் சற்றே மறந்தான்போல் இரண்டடி பின்வாங்கினன். முன்வைத்த காலைப் பின்வாங்கல், காரணம் எதுவேயாயினும், வீரனுக்கு இழுக்கே. இதனால், வான்மீகர் நூலிற்கு வியாக்கியானம் எழுதியவர், இரத்தம் ஒழுகவரும் கரனது தோற்றத்தைக் காணக் கூசியேனும், அம் முடைநாற்றத்தை வெறுத்தேனும், எதிர்த்துப் பொருதற்கு இலக்கெடுக்கவேனும் இராமன் பின்னடி வைத்தான் என்று கருதவேண்டுமே யொழிய, வீரமில்லா வெருவலால் இவ்வாறுசெய்தானெனக் கொள்ளலாகாதென்பர். எனின் முன்தன் கையிருந்த வில்லினைக் கரனது பாணம் ஒடிக்கும்படி இராமனிருந்தது எதனாலோ! இவ்வாறே, தன் மெய்யெலாம் புண்ணுற்றுச் சோரி பெருகப்பொருது மீண்டானென வான்மீகிமுனிவரால் புகலப்பட்ட இராமனைக் களிகூர்ந்து தழுவிய சீதை அவன் உடல் காயமின்றி இருந்ததைக்கண்டு சந்தோஷமடைந்தாள், எனவரும் மூரணை, சானகியின் வெம்முலைகள் ஒற்றியதால் இராமனது இரணங்கள் அதற்குள் ஆறிப்போயின வென்றறிய வேண்டுமெனுங் காரணங் காட்டி அழிக்க முயல்வார்.

இராமனுக்கு இன்னவாறெலாம் யாதொன்றும் இழுக்கு வந்தடையாவண்ணங் கம்பர்பெருமான் காக்கின்றனர். நெற்றியின்மீது பாணம்பட்டதும் கையிருந்தவில் இற்றதும் இராமனுக்கு முதனூலிற்போல் வழிநூலிலும் நிகழ்கின்றன. இந்நிகழ்ச்சிகளை வைத்துக்கொண்டே இராமபிரான் பெருமைக்கு இழுக்கு வாராமற் காக்கலாம் என்ற துணிவு இருந்தமையால் கம்பர் முதனூலை ஓரளவு பின்பற்றலாயினர் எனக் கருதவேண்டும். "நன்று நன்று கின்னிலை" என அருளிறை நயந்து வியந்திருந்த அயர்வினால் இராமன் மீது தூடணன் பாணம் தொடநேர்ந்தது என்றதால், இராமனது அருளும் வீரத்தின்பாலுள்ள வியப்பும் சிறக்க அவன் பெருமையே மிகுகின்றது. "எய்த காலமும் வலியும் நல்லென நினைந்திராமன் செய்த சேயொளி முறுவலன்" என்று அந்நிகழ்ச்சி தொடர்கின்றமையால், இராமனது ஆற்றலிற்கு விஞ்சியே தூடணன்சரம் இவன் நெற்றியினை இலக்குக்கொண்டது என்னும் எண்ணம் எழுவதற்கு இடமில்லை. இவ்வாறே முறிந்தது வில் என்னுஞ் செய்தியில் இருநூல்களு மொக்குமெனினும், கடுந்திறலாற்றல் கரன் விடு கணையினால் அதனை முறிப்பதின்றி இராமனது ஊர்வமே முறித்ததென்று கம்பர் மாற்றிக்கொண்டனர். இவ்வளவு நேர்ந்ததுங்கூட, சிறிதேனும் இராமன் சினந்ததற்குப் பயனாக விளைந்தவோர் அசைவிலாத கவிதாநீதியின் காரியமே என்பதை முன்னர் விளக்கி யிருக்கின்றோம். பகைவன் விடு நெடும் பகழி வந்துதன் நெற்றிப்பட்டத்திற் படினும் படலாம்; வீரன்கையிருந்த வொருவில் வேறு இரண்டுபட முறியினும் முறியலாம், போர்க்களத்தில் பின்னெடுத்து இரண்டடி வைப்பதன் பரிபவத்தை விலக்கலென்பது எவ்வாற்றானும் இயலாதென்ற காரணத்தாற்போலுங் கம்பர் அச்செய்தியைத் தம் நூலினுள் சேர்க்காமல் அறவே அகற்றிவிட்டனர்.

மற்று, புண்ணுஞ் சோரியுமாய்ப் போந்த இராமன் சீதையின் கண்களுக்குக் காயமில்லாதவனாய்க் காணப்பட்ட விந்தைக்கு அவள் தனங்களை மருந்தாக்குவதனினும், காவியத்தலைவனும் அண்ணல் வீரனை, பின்னிரண்டடி பெயர்த்துவிக்காமலும், புண்ணின்று சோரி சொரிவிக்காமலும் போர்க்களத்தினின்று மீட்டிக் கொணர்தல், எல்லாப்படியாலும் ஒருகவி அவனுக்குச் செலுத்தவேண்டிய கடமைகளில் முதன்மையானதென்று மதித்தலே தகவுடைத்தாம்.


ஆயுர்வேத வித்வான் B. V. பண்டிட் அவர்களின்

டானிக்குகள் :

ச்யாவனப்ராச

ஜீவஸுதா

பாதாமி லேகியம்

தந்வந்தரி லேகியம்



தைலங்கள் :

அமிர்தாமலக

பிருங்காமலக

ஸுகுமார

ஹிமஸாகர

"பாலஸுதா" குழந்தைகளுக்குச் சிறந்த டானிக் (ரூபா 1-0-0)

காஸ்ட்ராலக்ஸ் : சுத்தம் செய்து மூலிகை சேர்ந்த ஆமணக்கெண்ணெய் (6 அவுன்ஸ் 8 அணு)

ஸ்ப்ளிவரால் : குழந்தை கட்டிக்கும், ஜ்வரக் கட்டிக்கும் (ரூபா 2-0-0)

ஸ்ரீகர கஸ்தூரி மாத்திரை, (அணு 4) கோரோஜனை மாத்திரை, (அணு 6) பால சஞ்சீவினி (அணு 4)

ம.ட.ச்யாவனப்ராசா ம.ட.பிருங்காமலகதைலம் கோரோஜனை மாத்திரை

"நஞ்சன்கூடு பல்பொடி"

சாதாரணம்-பாக்கெட் ம.ட.டூமெடிகேடட்-டப்பி

(தபால் பில்லையுடன் விலைக்கு எழுதவும். ஆட்வான்ஸுடன் ஆர்டர் செய்யவும்.)




# கலா நிலயச் சொல்லூடாட்டம் 8.

இடம்—வலம்

1. சாயந்திரம்.
3. வெய்யிற்காலம்.
4. பெண்.
6. ஓர் இசைக்கருவி.
7. பூங்கொடி.
8. சூரியன்.
9. ஓர் பாத்திரம்.
11. வாழைமரம்.
13. மாலையில் மலரும் ஒரு மலர்.
14. நிலைபெற்றிருக்க.
15. விரோதம்.
16. வட இந்தியாவிலுள்ள ஓர் நதி.
17. சித்திரம்.
18. நெல் முதலியவைகளைச் சேர்த்துவைக்கும் மண்கூடு.
20. வாள்.
21. பட்டினம்.
23. ஓர் விஷ ஜந்து.
24. இராமனால் கொல்லப்பட்ட ஓர் அரக்கன்.
25. புருடர்கள்.
27. வேடிக்கைப் பேச்சு.
29. ஓர் மரம்.
30. தருவதற்கு.
32. பெண்.
33. குடம்.

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| ■ | 1 | | 2 | ■ | 3 | | ■ | 4 | 5 |
| 6 | | ■ | 7 | | | ■ | 8 | | |
| ■ | 9 | 10 | | ■ | 11 | 12 | | ■ | |
| 13 | | | ■ | 14 | | | ■ | 15 | |
| | ■ | 16 | | | ■ | 17 | | | ■ |
| 18 | 19 | | ■ | 20 | | | ■ | 21 | 22 |
| ■ | | ■ | 23 | | ■ | ■ | 24 | | |
| 25 | | 26 | | ■ | 27 | 28 | | | ■ |
| 29 | | | ■ | 30 | | | | ■ | 31 |
| | ■ | 32 | | | ■ | 33 | | | |

மேல்—கீழ்

1. சேர்தல்.
2. நீர்த்துளி.
3. விச்வாமித்திர முனி.
4. மழை.
5. தம்பிக்கை.
8. நைவேத்தியம்.
10. செம்படவர்.
12. குபேரன்.
13. உடலின் பின்புறம்.
14. வீடுகள்.
15. சிறுவர் விளையாடுங் கருவி.
19. கள்வன்.
22. உண்ணு.
23. இரதம்.
24. கங்கணம்.
25. பன்னிரண்டு மாதங்களில் ஒன்று.
26. பெண்.
27. நீக்கு.
28. வாயிலெடு.
30. வதைசெய்.
31. அழகிய.

கடைசிநாள் :—1932 வருடம், அக்டோபர் மாதம், 17 தேதி.

பரிசு:—கலா நிலயம், 1928, 1930, 1931 ஆகிய இவ்வருடங்களின் யாதாவது ஒன்றன் ஆப் லெதர் - கில்ட் பைண்ட் புத்தகம் ஒன்று; அல்லது இவ்வருடமேனும் அடுத்த வருடமேனும் ஒரு வருடத்திற்கு நம் பத்திரிகையை இலவசமாய்ப் பெற்றுக்கோள்ளலாம்.

1. இந்தக் கட்டங்கள் மாதிரியாகவே வேறோர் காகிதத்தில் வரைந்துகொண்டு அதனில் விடையை எழுதி யனுப்பவும்.

2. அவ்வாறு அனுப்புபவர், அதனோடு நாலணுவுக்குக் காலணுத் தபால் தலைகள் (பதினாறு) அனுப்புதல் வேண்டும். இலங்கை வாசிகள் அவ்வூர்த் தபால் தலை 25 சதம் அனுப்பலாம். மலேயா தேசத்தவர் எட்டணு பெறுமான போஸ்டல் ஆர்டர்கள் அனுப்புதல் வேண்டும்.

3. பிழையற நேரிய விடைகள் அனுப்பியவர்களுடைய பேர்களை எல்லாம் சீட்டுக் குலுக்கிப் போட்டு யார் பேர் வருகின்றதோ அவர் ஒருவருக்கு மட்டுமே பரிசு அளிக்கப்படும்.

4. இவ்வண்ணம் அவ்வவ் முறை பரிசு பெற்றவர்கள் தவிர, நேரிய விடைகள் ஆறு சொல்லூடாட்டங்களுக்குத் தொடர்ச்சியாக அனுப்பியிருப்பவர்கள் பெயர்களை யெல்லாம் மற்றுமோர் முறை சீட்டுக் குலுக்கிப் போட்டு அதனில் பெயர் வருகிற ஒருவருக்கும், மேல் குறித்த வருடங்களின் யாதாவது ஒன்றன் தொகுதி இதழ்கள் பைண்ட் செய்யாமல் பரிசாக அளிக்கப்படும். இதுகாறும் நேரியவிடைகள் தொடர்ச்சியாக அனுப்பியிருப்பவர்களும் இப் பரிசிற்கு உரியவராவார்.

5 சொல்லூடாட்டங்களைப் பற்றிய எல்லா விடயங்களிலும் மானேஜர் செய்கின்ற தீர்மானமே முடிவானது. இவைகளைப்பற்றி எவ்விதக் கேள்வியும் எழுதலாகாது.

6. இந்தப் போட்டியில் நம் சந்தாதார்கள் மாத்திரமன்றி ஏனையோரும் கலந்துகொள்ளலாம்.

விடைகளை மானேஜர், கலா நிலயம், வேளாளர் வீதி, புரசைபாக்கம், சென்னை. என்னும் விலாசத்திற் கனுப்பவும்.

## சொல்லூடாட்டம் நம்பர் 6. விடையும் முடிவும்.

நேரான விடை :—

இடம் - வலம்:—1. புரவி ; 3. தவிசு; 6. காளி; 7. காமரம்; 9. இள. 10. விப்பிரன்; 12. பகரம்; 14. புலம்; 15. கம்பலை; 17. காரி அல்லது பாரி; 19. விமரிசை; 22. காதம்பரி; 25. கைனி; 26. வரற்க; 27. தவம்; 29. சோனகம்; 30. ஊர்தி; 31. ஆழம்; 32. பசி; 34. யசமான்; 35. அரைசு.

மேல் - கீழ்:—1. புளிப்பு; 2. விகாரம்; 3. தர; 4. விம்பம்; 5. சோனம்; 6. காவி; 8. மன்; 9. இரலை; 11. பிலஹரி அல்லது பிலகரி; 13. கபடம்; 15. கரிகாற் சோழன்; 16. கவிகை; 18. சோரி; 20. மனிதர்; 21. சைவம்; 23. தகனம்; 24. பரம்பரை; 28. வதிய; 30. ஊதை; 31. ஆமா; 33. சிசு.

நேரிய விடை அனுப்பியவர்:—R. திருமலைஜக்கையா, கோம்பை; K. அல்லாபிச்சை, கோம்பை; A. சுருளியாண்டி, கோம்பை; சி. கந்தையா, மன்னூர்; A. P. L. சொக்கலிங்கம், மேலைச்சிவபுரி; S. N. இராமசுவாமி ஐயங்கார், சங்கரிதுர்க்கம்; R. சின்னசாமி, சிந்தலைச்சேரி; A. இராமலிங்கம், கிள்ளான்; V. சரவணமுத்து, மன்னூர்; K. வேலுப்பிள்ளை, பேராதனை; S. T. பொன்னம்பலநாத முதலியார், ஸ்ரீவைகுண்டம்; A. K. S. பத்மநாபன், திருப்பத்தூர்; K. N. கதிரேசன் செட்டியார், தேவகோட்டை; முத்து, K. M. M. அருணசலம் செட்டியார், தேவகோட்டை; V. R. சாரங்கபாணி, உமைலைப்பேட்டை; A. கனகசபைப் பிள்ளை, நன்னேயா; R. M. நாராயணன் செட்டியார், தேவகோட்டை.

பரிசுபெற்றவர்:—V. R. சாரங்கபாணி, உமைலைப்பேட்டை. இதுகாறும் 6 சொல்லூடாட்டங்களுக்குத் தொடர்ச்சியாக நேரிய விடையனுப்பியவர்:—சி. கந்தையா, மன்னூர்; V. சரவணமுத்து, மன்னூர். இவ்விருவரில் பரிசு பெற்றவர் V. சரவண முத்து, மன்னூர்.

## கலாநிலயம் 1930-வது வருடம் 3-வது வால்யூம்.

**தலையங்கங்கள்:**—அறியாமை வேண்டப்படும் 4. சுயநலச் சோதனை 8. விஷயத்திற்கேற்ற விளம்பரம். முயலுக்கு முயலவேண்டா. விளம்பினால் வெட்கக்கேடு. கல்லாதபேர்களே நல்லவர்கள் 3. நாணத்தால் நைவார்திறம். வாலின் நீளம். பெருமையின் பெருமை...முதலிய கட்டுரைகள் ஐம்பது, உலகியலோடு வாழ்க்கையின் தத்துவத்தை விளக்குவன.

**கம்பராமாயணம்:**—(T. N. சேஷாசலம் ஐயர், B. A. B. L.) அயோத்தியா காண்டம் முதலிரண்டு படலங்களின் விளக்க ஆராய்ச்சி. அரசியலுக்குரிய அறங்களில் திருவள்ளுவர் வேதவியாசர் முதலானோர்க்கும் கம்பருக்கும் உள்ள வேறுபாடு 25-கட்டுரைகளில் விளக்கப்பட்டுளது. ஸ்ரீமான் சோமசுந்தர பாரதியார் வரைந்துள, "தசரதன் குறையும் கைகேசி நிறையும்" என்னும் நூலிற்கூறிய பொருளும் முடிவும் கம்பருடைய கருத்திற் கொவ்வாதன வென்று 25-கட்டுரைகளில் வாதிக்கப்பட்டிருக்கின்றது.

**குறுந்தொகை:**—(K. இராமரத்னம் ஐயர், B. A.) புத்தகமாய் இப்பொழுது கிடைக்காத இச்சங்கநூற் செய்யுள் நானூறும் விளக்கமான உரையுடன் பதிப்பிக்கப் பெற்றிருக்கின்றது.

**அப்பர்:**—(E. N. தணிகாசல முதலியார், B. A. B. L.) அப்பர் அறுபத்துநான்கு கலைகளையறிந்து கையாண்ட பெருமை விளக்கப்பெற்றிருக்கின்றது.

**இலஞ்சிப்பாவை:**—(T. S. நடராஜபிள்ளை, B. A. B. L.) Sir Walter Scott என்பவர் ஆங்கிலத்தில் பாடிய Lady of the Lake என்னும் காவியத்தைத் தழுவி எழுதிய கதை.

**மானத சாத்திரம்:**—(T. P. மீனாக்ஷிசுந்தரம் M. A., B. L.) ஆங்கிலமுறையைத் தழுவி, நடத்தை, உணவு நாட்டம், அழுகை, சிரிப்பு, தன்னெடுப்பு, தன்னொடுக்கம், புணர்ச்சி, இளைவிழைச்சி, விளையாட்டு முதலியவைகளின் தத்துவங்கள் விளக்கப்பட்டுள்ளன.

**தமிழ்ப் பாடம்:**—வில்லிபாரதம் கிருஷ்ணன் தூதுச் சருக்கமும், அஷ்டப்பிரபந்தமும் போதிப்பதுடன், புணரிலக்கணம் முழுவதும் தெற்றென விளக்கப்பெற்றிருக்கின்றது.

**நம்மாழ்வார் வைபவம்:**—K. இராஜகோபாலா சாரியார், B. A. B. L.) விளக்கமான ஆராய்ச்சியுடன், 2-ம்பத்து 6-ம் தசகம் வரையிலும்.

இவைகளைத் தவிர, ஆங்கிலத்திலிருந்து மொழிபெயர்த்த கட்டுரைகளும், ஆச்சரிய சூடாமணி என்னும் வடமொழி நாடக மொழிபெயர்ப்பும், சிலப்பதிகாரக் கானல்வரியை அழகுற விளக்கிய 'மாதவி மாதவம்' என்னும் கட்டுரைகளும், தனிப்பாடல்களும், அண்டபுராண ஹாஸ்யப் பாடல்களும், நாயன்மார் சரித்திர உண்மைபோன்றபல கட்டுரைகளும் நிறைந்துள.

## 1931-வது வருடம் 4-வது வால்யூம்.

**தலையங்கம்:**—அகமே புறம், வாழ்வாங்கு வாழ்பவர் 10. உண்மையில் உழல்வார் திறம் 5. மெய்ம்மையை அலமரச் செய்யலாமோ 4. அருமையினு மருமை 4. மறப்பது முறுதியாமே. நள்ளாள் நகை 4. முதலிய கட்டுரைகள் 50.

**கம்பராமாயணம்:**—(T. N. சேஷாசலம் ஐயர், B. A. B. L.) கைகேசி சூழ்வினைப் படலம் முதல் அயோத்தியாகாண்டம் இறுதியாக 50 கட்டுரைகளில் ஆராயப்பெற்றிருக்கின்றது.

**சூளாமணி:**—(K. இராமரத்னம் ஐயர், B. A.) இதுகாறும் உரை யெழுதப்பெறாத இந்நூல், உரையுடன் பதிப்பிக்க ஆரம்பமாகி இவ்வாண்டில் ஐந்நூறு செய்யுள்கள் வந்துள.

**யாப்பிலக்கணம்:**—உறுப்பியலும், செய்யுளியலில் பாக்களின் இலக்கணமும்.

**அப்பர்:**—(E. N தணிகாசல முதலியார், B. A. B. L.) அப்பர் 64 கலைகளைக் கையாண்ட பெருமை விரிவாக வரையப்பட்டிருக்கின்றது.

**ஆண்டாள்:**—(E. N. தணிகாசல முதலியார், B. A. B. L.) ஆண்டாள் பிறப்பு, இளமை, கல்வித்திறம், அனுபவம், யௌவனம், மதம், சித்தாந்தம், முத்தி முதலியவைகளின் உண்மை.

**மானத சாத்திரம்:**—(T. P. மீனாக்ஷிசுந்தரம், M. A. B. L.) புலன்களின் அமைப்பும், உணர்வு முதலியவைகளின் தத்துவமும் விளக்கப்பெற்றுள.

**பிஸாரோ நாடகம்:**—ஆங்கிலப்புலவர் R.B. Sheridan எழுதிய நாடக மொழிபெயர்ப்பு.

**நவராத்திரி நாடகம்:**—(K. N. சுந்தரேசன், B. A. Hons) ஓர் நவீன நாடகம்.

**சிதம்பரதேவர் சரிதம்:**—(Dr. V. S. அருணாசலம் பிள்ளை) முத்தியில் மனம் வைத்து உலகத்தில் விவகரிப்பார் பெருமையை உட்கொண்ட வோர் நாவல்.

**களவியற் காரிகை:**—(S. வையாபுரிப்பிள்ளை, B. A. B. L.) இதுகாறும் அச்சேறாத நூல். அகப்பொரு ளிலக்கணத்தின் சிறப்பை விளக்கவல்லது.

**கந்தபுராணமும் சங்க நூல்களும்:**—(பண்டிதர், திம்மப்பா ஐயர்) கந்தபுராணத்தைச் சங்கநூல்களோடு ஒப்புநோக்கி ஆராயும் கட்டுரைகள்.

இவை தவிர, மொழிபெயர்ப்புக் கட்டுரைகள், தமிழிரட்டையர், முதலிய கட்டுரைகள் பல.

ஒவ்வொரு வால்யூமிற்கும் விலை வருமாறு:— பைண்ட் செய்யாதது ரூ. 7 8 0
காலிகோ கில்ட் பைண்ட் ரூ. 8 8 0 ஆப்லெதர் கில்ட் பைண்ட் ரூ. 9 0 0

இவ்விலையில் தபால் அல்லது இரயில் சார்ஜ் அடங்கவில்லை. இந்தியாவில் உள்ளவர்கள் இரயில்வே பார்ஸல் மூலமாகப் பெற்றுக்கொள்ளலாம். To Pay போட்டு அனுப்புவோம். எழெட்டெண்ணுக்களுக்கு மேல் இரயில்வே கட்டணம் ஆகாது. பர்மா, ஸிலோன் இவ்விரண்டு இடங்களுக்கும் ரயிலில் அனுப்பமுடியாதாகையால் விலையுடன் தபால் பார்ஸல் சார்ஜ் ரூ. 2—4—0 சேர்த்தனுப்பவேண்டும். மலேயே, தென்னாப்பிரிக்கா முதலிய நாடுகளில் இருப்பவர் தபால் சார்ஜிக்கு ரூ 3. சேர்த்தனுப்பவேண்டும். இவைகளை வி. பி. யில் அனுப்ப இயலாது. முன்பணம் அனுப்பி எழுதல் வேண்டும்.




# வர்த்தமானம்

இராஜப் பிரதிநிதியின் அறிக்கை:—செப்டம்பர் மாதம் முதல்வாரத்து இறுதியில் கூடிய இந்தியச் சட்ட சபையில் இராஜப் பிரதிநிதி, பிரிட்டிஷ் கவர்ன்மெண்டார் இந்திய அரசியல் திருத்த விஷயமாய்ச் செய்துள்ளமுடிவை வெளியிட்டார். அதன் சுருக்கம் வருமாறு:—

அகில இந்திய சமஷ்டி முறையை (All India Federation) ஆதாரமாகக்கொண்டு, மத்திய அரசாங்கத்திலும் மாகாண அரசாங்கங்களிலும் எவ்வளவு பொறுப்பாட்சியை அளிக்க முடியுமோ அவ்வளவு பொறுப்பாட்சியை அளித்துவிடப் பிரிட்டிஷ் அராசாங்கத்தார் தீர்க்காலோசனைசெய்து ஒரு முடிவுக்கு வந்திருக்கின்றனர். அன்னதற்குரிய ஏற்பாடுகளைச் செய்ய, வருகிற நவம்பர் மாதத்தில் ஒரு மகாநாடு கூடும். இம்மஹாநாடு பகிரங்கமாகக் கூடாது. அப்படிக் கூடுவதால் காரியங்கள் சீக்கிரத்தில் நடைபெறாதென்று, அந்தரங்கமாகக் கூட்டப்படும். பிரதிநிதிகளின் சம்மதத்தோடு ஒருதிட்டம் அமைக்கப்படும். அது பார்லிமெண்டின் யோசனைக்கும் அங்கீகாரத்திற்கும் விடப்படும்.

இந்திய முன்னேற்றத்தைக் கோருவோர் அனைவரும் வகுப்புத்தொல்லையை ஒழிக்க முயலவேண்டும். இன்னதற்குப் பல வகுப்பு மக்களிடைத் தேசிய உணர்ச்சி ஏற்படவேண்டும். இவ்வுணர்ச்சி பரவி, வகுப்பு உணர்ச்சி அற்றுப்போகும் வழிபற்றி நாம் எல்லோரும் உழைக்கக் கடமைப்பட்டிருக்கின்றோம். இந்தியாவில் தேசிய உணர்ச்சி பரவாவிட்டால் மற்றச் சுயவாட்சி நாடுகளுடன் இந்தியா சமஅந்தஸ்துப் பெறமுடியாது.

***

இரப்பர் விளைவு:—ருஷியாவில் ஒரு பாகத்தில் ஒரு புதியசெடி கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாம். அச்செடிகள் கிரிமியா வென்னு மிடத்தில் 120 மைல் விஸ்தீரணமுள்ள ஒரு திடலில் ஏராளமாக வளர்ந்துள்ளனவாம். அச்செடியிலிருந்து ரப்பர் செய்யலாமாம். ருஷிய ரசாயன ஆராய்ச்சிச்சாலையினரின் முடிவுப்படி அச்செடிகள் 2500 ஏக்கர் நிலத்தில் சாகுபடி செய்யப்பட்டுள்ளனவாம். அடுத்த வருடம் 125000 ஏக்கரில் பயிரிடப்படுமாம்.

***

எவர்ஸ்டு சிகரம்:—ஹிமயமலையின் சிகரங்களில் மிகவும் உயர்ந்ததான எவரஸ்டின் உச்சியைக் கண்டுபிடிப்பதற்கென்று பிரிட்டிஷ் ஆராய்ச்சியாளர் அடுத்த வருடம் மே மாதம் முயல்வார்களாம். அன்னதற்கு இப்பொழுதிருந்தே ஏற்பாடுகள் நடக்கின்றனவாம். பழைய ஆராய்ச்சியின் பயனாக அச்சிகரம் 29140 அடி உயரமுள்ளது என்று தீர்மானிக்கப்பட்டது. எனினும் இன்னும் முடிவான உயரம் இவ்வளவுதான் என்று தீர்மானிக்கப்படவில்லை. 1921-ம் ஆண்டில் இச்சிகரத்தைக் கண்டுபிடிப்பதற்கு ஏற்பாடு செய்யப்பட்டது. பிறகு பல நாட்டார் 1922, 1923, 1924, 1925 ஆகிய வருஷங்களில் முயன்றனர். இதுவரை அதன் சிகரத்தை எவரும் காணவில்லை. 1924 வருஷம் செய்த முயற்சியில் 26800 அடிகள் வரையில் அளந்தனர்.

தொழிற் கட்சியார் தீர்மானம்:—லண்டனில் சமீபத்தில் கூடிய தொழிற்கட்சி மஹாநாட்டில் சீனா ஜப்பான் யுத்தம் நிறுத்தப்படவேண்டும் என்றும், இவ்விரு நாட்டாருக்கும் உள்ள வழக்கு மத்தியஸ்த முறையில் தீர்த்துக்கொள்ளப்படவேண்டுமென்றும், இந்த யுத்தம் நிறுத்தப்படுவதற்காக மற்ற நாட்டார் யுத்த தளவாடங்களை அந்நாட்டாருக்கு விற்பனை செய்யாமல் நிறுத்தவேண்டு மென்றும் ஒருதீர்மானம் செய்யப்பட்டுள்ளது என்று லண்டன் செய்தி கூறுகின்றது.

***

பெல்ஜியத்தில் பிளேக்:—பெல்ஜியத்தில் பிளேக் வியாதி பரவிவருகின்றதென்றும், ஆகஸ்டு மாதத்தில் மாத்திரம் 718 பேர் இந்நோய் கொண்டனர் என்றும், அவர்களில் 389 பேர் இறந்தனர் என்றும் அரசாங்கத்தார் அவ்வியாதியைத் தடுக்க முயன்று வருகின்றனர் என்றும் பெல்ஜியம் செய்தி கூறுகின்றது.

***

சிரியாவில் குடியரசு:—மொராக்கோ பிரதேசத்தில் அரசியல் குழப்பத்திலிருந்த சிரியாவில், கடைசியாகக் குடி அரசு ஆட்சி ஏற்பட்டு விட்டதென்றும், மாட்பே எல்பெட் என்னும் ஒரு தனவந்தர் குடியரசுத் தலைவராக நியமனம் பெற்றார் என்றும் கெயிரோச் செய்தி கூறுகின்றது. இப்பிரதேசத்தின் மேற்பார்வை அதிகாரம் வகித்துள்ள பிரஞ்சு அரசாங்கம் இக்குடியரசு ஏற்பாட்டை ஏற்றது என்றும் கூறப்படுகின்றது.

***

எல்லைப்புறத்தில் கொலை:—எல்லைப்புறமாகாணத்தில் ஒரு கிராமத்தில் சென்றவாரம் டோரா இஸ்மேல் கான் என்னுமிடத்திலுள்ள போலீஸ் அதிகாரி A. முகமத்கான் என்பவர் தங்க நேர்ந்தது. அப்பொழுது யாரோ ஒருவன் அவரைக் கொன்றுவிட்டான். இதுவரை குற்றவாளி அகப்படவில்லை. போலீஸ் அதிகாரிகள் தேடுகின்றனர்.

***

2711 பெண்கள்:—இந்தியச் சட்ட சபையில் ஒரு கேள்விக்கு விடையாக ஹோம் மெம்பர் கூறியதாவது:-சட்டமறுப்பு ஆரம்பமானது முதல் 1932 ஆம். வருஷம் ஜூலை மாதம் இறுதிவரை சட்டம் மறுத்த குற்றத்திற்காகத் தண்டனை யடைந்த பெண்களின் தொகை 2711. அம்மாதம்வரை விடுதலை யடைந்தவர்கள் போக, ஜூலை மாதம் 31-ந்தேதி சிறையிலிருந்த பெண்களின் தொகை 1020.

***

சேலம் பாங்கியில் கொள்ளை:—சென்றவாரம் சேலத்திலுள்ள ஸ்ரீநிவாஸ பாங்கியில் கொள்ளை போயிற்றும். பாபு என்று அழைக்கப்படும் விசுவநாத முதலியார் இக்கொள்ளையில் சம்பந்தப் பட்டவரென்று போலீசாரால் கைதுசெய்யப்பட்டாராம். அவர்வசமிருந்து ஆறாயிரம் ரூபாய் மதிப்புள்ள நகைகளும் நாலாயிரம் ரூபாய் நோட்டுக்களும் பற்றப்பட்டனவாம். இக்கொள்ளையில் சம்பந்த முள்ளவர் என்று புதுச்சேரியிலுள்ள நாராயணசாமி முதலியார் என்பவரும் பிரிட்டிஷ் சி, ஐ. டி. போலீஸ் உத்தியோகஸ்தரால் கைதுசெய்யப்பட்டுள்ளாராம்.

M211,N2?KN
199150

KALANILAYAM
Reg. No. M. 2324.


## — சரஸ்வதி பவுண்டரி —

தந்திவிலாசம்:—காஸ்டிங்.] [Established 1904] [டெலிபோன் நெ:—3002

96. புளியந் தோப்பு ஹைரோட், பெரம்பூர் பாரக்ஸ், சென்னை.

எம்மிடம் தேர்ச்சிபெற்ற இந்தியத் தொழிலாளர்களால் தயாரிக்கப்பட்ட ரங்கூன் & அமரிக்கன் டைப், ரைஸ்ஷெல்லர்களும், பாலிஷிங் கோன்களும், மூன்று தினுசாயுள்ள சவரன் டை பிரஸுகளும், வெள்ளிப் பாத்திரங்கள் செய்யும் பிரஸுகளும், பொன் வெள்ளித் தகட்டாலைகளும், கரும்பாலைகளில் கல்கத்தா சைஸ்களும், சாதா மூன்று கால் கரும்பாலைகளும், தண்டவாளச் சுழல்படிகளும், தண்டவாளத் தூண்களும், பலவிதமானத் தண்டவாளக் கிராதிகளும், ஆயில் காஸ் மோட்டார் எஞ்சின்களுக்குத் தேவையாயுள்ள ஸிலிண்டர், வாட்டர் ஜாகட்டுக்களும், மற்றத் தனிச் சாமான்களும், எங்கல்பர்க் டைப் நெம்பர் 1, 2, 3, 4, 7 & 8 பால்பேரிங் & சாதா ரைஸ் ஹல்லர்களும், அவைகளுக்குவேண்டிய தனிச் சாமான்களும், தண்டவாள சாதா புல்லிகளும், பட்டாதிப் புல்லிகளும், கிடைக்கும். ஆயில் காஸ் ஸ்டீம் எஞ்ஜின்களின் ஸிலிண்டரை ரீபோர் செய்தும் புதிய பிஸ்டன் போட்டும் கொடுக்கப்படும்.



முனிஸிபாலிடிகளுக்குத் தேவையாயுள்ள எலக்ட்ரிக் விளக்குப் போஸ்டுகளும், சாதாரண 1, 2, 3, 4, 5 கிளையுள்ள லாந்தர் போஸ்டுகளும், வாராவதிக்குப் போடக்கூடிய லாந்தர்போஸ்டுகளும் பிராக்கட்டுக்களும், மேனேல் கவர்களும், திம்மிசுகளும், குப்பைவண்டி இன்லெட் அவுட்லெட் வால்வுசெட்டுகளும், பைப்பு பிட்டிங்கிற்கு வேண்டிய தண்டவாளக் குழாய்களும், கப்பிளிங் பைப் டீ, பிரான்ச் ரெடியூஸர்களும், தோட்டத்தில் போடக்கூடிய தண்டவாளப் பெஞ்சு கால்களும், பள்ளிக்கூடத்துக்கு வேண்டிய சாதா மடிப்புப் பெஞ்சுகளும் கிடைக்கும்.

மைல்ஸ்டீல் தகட்டினால் செய்த பாயிலர் சிம்னிகள், டாங்குகள், நெல் அவிக்கும் பாய்லர்கள், டிரஸ்கள், வாராவதிகள் இன்னும் பலவிதமான ரிவிட்டு வேலைகள் யாவும் நேர்த்தியாய்த் தயாரித்துக் கொடுக்கின்றோம்.

சார்ஜிகள் மிகவும் சரசம். குறித்த காலந் தவறுவதில்லை. கேட்லாக்கிற்கு எழுதவும்.



### :: அமிர்த சாகரம் ::

தேக பலத்தையும், ஞாபகவிருத்தியையும், பும்ஸத்வத்தையும், கொடுப்பதில் எங்கள்

அமிர்தார்ணவ லேகியம்

அமிர்தசாகரம் போன்றது. மேலும், நீடித்த தலைவலி, மண்டை இடி, மார்பு வலி, தேகச் சூடு முதலிய வியாதிகளைக் கரஸ்தமாகக் கண்டிக்கும். 20-தோலா லேகியம் கொண்ட டப்பி 1-க்கு ரூபா 2.

இனும்! ஆரோக்கிய கிரந்தம் இனும்!

கேட்போருக்கு இனாமாகவும், தபாற்செல வில்லாமலும் அனுப்பப்படும்.

ஆதங்க நிக்ரஹ ஒளஷதாலயம்,
26, பிராட்வே, மதராஸ்.



### கற்பக மலர் (சிறு கதைகள்)

(ஆசிரியர் - சகோதரி வி. பாலம்மாள்)

மலர் 1 - விருந்தில் விலங்கு - விலை அணு 3.
மலர் 2 - அவள் இஷ்டம் - விலை அணு 3.

ஏழணு ஸ்டாம்புக்கு 2-புத்தகங்கள் அனுப்பப்படும்.

ஸ்ரீமதீ பிரசுராலயம், மயிலாப்பூர், சென்னை.



### : : இராமாயண வினு விடை : :

இது சிறந்த கிளேஸ் காகிதத்தில் நன்கு அச்சிடப்பட்டு 380 பக்கங்கள் கொண்டது. ஏழு காண்டங்களும், அரிய நீதிகளும் தெளிவுவாய்ந்த அனுபந்தங்களும் அடங்கியது. விலை ரூபா 1 8 0

பாலவிநோதினி ஆபீஸ், 323, தண்டையாரப்பேட்டை
வண்ணாரப்பேட்டை போஸ்ட், மதராஸ்



### NATIONAL INSURANCE COMPANY, LIMITED.

**Head Office:**
**NATIONAL INSURANCE BUILDING,**
**7, Council House Street, Calcutta.**

| | |
|---|---|
| New Policies Issued in 1931 for over ... ... | Rs. 1,32,33,000 |
| Showing an increase over the New Business figure for 1930 of ... ... | 16.54 % |
| Claims paid up to end of 1931 over ... ... | Rs. 90,00,000 |
| Invested Funds amount to over | Rs. 1,75,00,000 |

LOW RATES LIBERAL CONDITIONS
NEW TABLES NEW BENEFITS

For particulars & Agencies please write to:—

R. G. DAS & Co., *Managers.* OR The Branch Secretary, Madras Branch, 113, Armenian Street, Madras.

**FIRE & ACCIDENT RISKS**
**covered by**
**NATIONAL FIRE**
AND
**GENERAL INSURANCE COMPANY Ltd.,**
**NATIONAL INSURANCE BUILDING,**
**7, Council House Street, Calcutta.**

The Branch Secretary, Madras Branch, 113, Armenian Street, Madras. OR R. G. DAS & Co., *Managers.*


Printed at the B. N. Press, Mount Road and Published by Mr. E. Kumariah, B.A., B.L., (Editor)